# அத்தியாயம் 2







## தேசிய உற்பத்தியும் செலவினமும்

### 2.1 பொதுநோக்கு

**இலங்கையின் பொருளாதாரம், 2005இன் 6 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைத் தொடர்ந்து 2006இல் உண்மை நியதிகளில் 7.4 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வீதத்தில் வளர்ச்சிடைந்ததுடன், இது 1978இற்கு பின் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சியுமாகும்.**

உயர்ந்தளவான மற்றும் தளம்பலுறும் எண்ணெய் விலைகள், வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகள் மற்றும் மீண்டும் ஆரம்பித்த பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவற்றால் எடுத்துக் காட்டப்பட்ட சவால்மிக்கதொரு சூழலில் எய்தப்பட்டமையால் இவ்வளர்ச்சி பாராட்டத்தக்கதாகும்.


தலைக்குரிய வருமானம் 2005 இன் ஐ.அ.டொலர் 1,197 இலிருந்து 2006இல் ஐ.அ.டொலர் 1,355 இற்கு அதிகரித்தது.

பொருளாதாரத்தின் சகல துறைகளும் சாதகமான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்ததன் மூலம் விரிவாக்கம் பரந்தளவினதாக விளங்கியது. பணிகள்துறை ஆகக் கூடிய வளர்ச்சி வீதமான 8.3 சதவீதத்தை அடைந்து மொத்த வளர்ச்சிக்கு 63 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. இவ்வளர்ச்சிக்கு தொலைத் தொடர்பூட்டல், சரக்குக் கையாளல் மற்றும் நிதியியல் பணிகளிலான ஆரோக்கியமான விரிவாக்கம் பக்கபலமாயிருந்தன. சுனாமிக்குப் பின்பு, இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் சுற்றுலாச் செயற்பாடுகளில் மீட்சி காணப்பட்டபோதிலும், இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பாதுகாப்பு நிலைமை காரணமாக மீண்டும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. கைத்தொழில்துறை 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து (2005இல் 8.3 சதவீதம்) மொத்த வளர்ச்சிக்கு 26 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. இத்துறையின் மெதுவான போக்கு, பெரும்பாலும் இறக்குமதிகள், மூலப்பொருட்கள் மற்றும் கூலிகளின் அதிகரித்த செலவுகளால் பாதிப்படைந்த சகல நான்கு துணைத்துறைகளிலும் (கல்லுடைத்தலும் சுரங்கமகழ்தலும், தயாரிப்பு , மின்வலு மற்றும் நீர் மற்றும் கட்டடவாக்கம்) ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியால் ஏற்பட்டது. வேளாண்மைத்துறை 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து பொருளாதார வளர்ச்சிக்கு 11 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. சுனாமியிலிருந்து மீன்பிடித்துணைத்துறை மீட்சியடைந்ததன் சாதகமான விளைவு இவ்வாண்டில் உணரப்பட்டது. சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் உதவு தொகையளிக்கப்பட்ட விலைகளிலான வளமாக்கி என்பவற்றிலிருந்து நன்மையடைந்த வேளாண்மைத் துணைத்துறை சிறிதளவால் வளர்ச்சியடைந்தது. எனினும் சில பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் வேளாண்மைச் செயற்பாடுகளுக்கும் அதுபோல் உற்பத்தியைக் கொண்டு செல்வதிலும் போக்குவரத்துக்கும் தடங்கல்களை ஏற்படுத்தின.

**2006இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.2,802 பில்லியனாக விளங்கி, 18.4 சதவீதங் கொண்ட பெயரளவு வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ் உயர்ந்த அதிகரிப்பு வீதம் குறிப்பாக, இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியிலான உயர்ந்த உண்மைப் பொருளாதார வளர்ச்சியாலும், குறிப்பாக இரண்டாமரைப்பகுதியில் விலை மட்டத்தில் ஏற்பட்ட உயர் அதிகரிப்பாலும் பிரதிபலிக்கப்பட்டது.

**2006இற்கான தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ரூ.140,894 ஆக மதிப்பிடப்பட்டதுடன், இது 17.1 சதவீத அதிகரிப்பாகும்.** ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2005இன் ஐ.அ.டொலர் 1,197 இலிருந்து 2006இல் ஐ.அ.டொலர் 1,355 இற்கு 13.2 சதவீதத்தால் அதிகரித்தது.

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதங்கள்




**பொருளாதாரச் செயற்பாட்டிலான விரிவாக்கம் தொழிற் சந்தையில் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.** 2005இல் 7.3 சதவீதமாக காணப்பட்ட தொழிலின்மை வீதம் 2006இல் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சகல பொருட்களின் விலை மாற்றங்களை அளவிடும் மொ.உ.உற்பத்திச் சுருக்கி 2005இன் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 10.3 சதவீதத்தால் அதிகரித்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளைக் கொண்டிருந்த சுரங்கமகழ்தல் மற்றும் தொடர்பூட்டல் தவிர்ந்த அநேகமான துணைத் துறைகளில் உயர்விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. 3.4 சதவீதத்தைக் கொண்ட இலங்கை ரூபாவின் பெறுமானத் தேய்வுடன் இணைந்த உயர் எரிபொருள் மற்றும் பொருட்களின் விலைகள் அநேகமான முடிவுப் பொருட்களினதும், பணிகளினதும் விலைகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

**2006இல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர் விரிவாக்கம் உயர் நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வியால் உதவப்பட்டதாகும்.** குறைந்த உற்பத்திச் செலவைக் கொண்ட நாடுகளிடமிருந்து வரும் கடுமையான போட்டிக்கு மத்தியிலும் ஏற்றுமதிகள் மிதமானளவில் வளர்ச்சியடைந்த போதும் இறக்குமதிகள் 7 சதவீதத்துக்கும் கூடுதலான உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

**தனியார் நுகர்வின் உயர் வளர்ச்சியானது உயர் கூலிகள், உயர்ந்தளவிலான பொருட்களின் விலைகள் மற்றும் கம்பனித்துறையின் உயர்ந்தளவிலான இலாபகரத் தன்மை காரணமாக குடும்ப அலகு மற்றும் கம்பனித்துறை ஆகிய இரண்டிலும் காணப்பட்ட கூடிய செலவழிக்கத்தக்க வருமானத்தால் பெரும்பாலும் உந்தப்பட்டது.** அதிகரித்த சம்பளங்கள் மற்றும் வெள்ளம், மண்சரிவு மற்றும் கிழக்குப் பிராந்தியத்தில் தற்போது நடைமுறையிலுள்ள பதற்ற நிலைமை காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்வைத் தொடர்ந்து ஏற்பட்ட மனிதாபிமானத் தேவைகள் புனருத்தாபன செலவினத்தை ஈடு செய்யும் விதத்தில் அரச நுகர்வு 30 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**முதலீட்டுச் செலவினம் 2006இல் உயர் சதவீதத்தால் தொடர்ந்து அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தியின் விகிதமாக மொத்த முதலீடு பெரும்பாலும் 31.7 சதவீதத்தால் அதிகரித்த தனியார் முதலீட்டிலான பலமான வளர்ச்சி காரணமாக 26.5 சதவீதத்திலிருந்து 28.7 சதவீதத்துக்கு அதிகரித்தது. அரச முதலீடு 8.5 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, தனியார் முதலீடு 22.3 இலிருந்து 24.8 இற்கு அதிகரித்திருக்கையில் அரச முதலீடு 2005இன் 4.2 சதவீதத்திலிருந்து 3.8 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்கு சீராக்கப்பட்ட மொ.உ.உற்பத்தி என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உ) மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை விட குறைந்த வீதமான 7.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் தொடர்ந்து எதிர்க்கணியமாக விளங்கியதுடன் 2006இல் மேலும் 31.1 சதவீதத்தால் மோசமடைந்தது. இது பெரும்பாலும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களின் உயர் வெளிப்பாய்ச்சல்கள் மூலம் ஏற்பட்டது.

**2006இல் பலமான நுகர்வுச் செலவினம் காணப்பட்ட போதிலும் தனியார் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 550 பில்லியனுக்கு அதிகரித்ததால் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் அதிகரித்தன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் குறைச் சேமிப்புக்கள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன, இதேவேளை, முதலீட்டு உட்பாய்ச்சல்களைவிட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் தேறிய இறக்குமதிகளின் உயர் அதிகரிப்பு 2006இல் மொஉ.உற்பத்தியின் சதவீதமாக குறைச் சேமிப்புக்களை

## அட்டவணை 2.1 நிலையான (1996) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்

| துறை | மாற்ற வீதம் ( % ) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு ( % ) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சவீதப்பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) |
| **வேளாண்மை** | **1.9** | **4.7** | **5.8** | **11.1** | **17.2** | **16.8** |
| **1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற் தொழில்** | **1.9** | **4.7** | **5.8** | **11.1** | **17.2** | **16.8** |
| 1.1 **வேளாண்மை** | 9.4 | 0.5 | 21.6 | 1.0 | 14.3 | 13.4 |
| தேயிலை | 2.5 | -1.9 | 0.5 | -0.3 | 1.2 | 1.1 |
| இறப்பர் | 10.8 | 4.2 | 0.6 | 0.2 | 0.4 | 0.3 |
| தெற்கு | - 2.2 | 7.6 | - 0.4 | 1.2 | 1.1 | 1.2 |
| நெல் | 24.4 | 2.1 | 10.4 | 0.9 | 3.0 | 2.9 |
| ஏனையவை | 7.5 | -0.8 | 10.5 | -0.9 | 8.6 | 7.9 |
| 1.2 காட்டுத் தொழில் | 1.7 | 4.9 | 0.5 | 1.1 | 1.7 | 1.6 |
| 1.3 கடற்றொழில் | - 42.2 | 51.7 | - 16.3 | 8.9 | 1.3 | 1.8 |
| **கைத்தொழில்** | **8.3** | **7.2** | **36.6** | **26.3** | **27.0** | **27.0** |
| **2. சுரங்கத்தொழிலும் கல்லுடைத்தலும்** | **14.1** | **8.0** | **4.0** | **2.0** | **1.9** | **1.9** |
| **3. தயாரிப்புத் தொழில்** | **6.0** | **5.3** | **16.3** | **11.8** | **16.3** | **16.0** |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பதனிடல் | 2.7 | 1.1 | 0.8 | 0.2 | 1.7 | 1.6 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 6.1 | 5.9 | 13.6 | 10.7 | 13.4 | 13.2 |
| 3.3 சிறு கைத்தொழில் | 9.8 | 5.3 | 1.9 | 0.9 | 1.2 | 1.2 |
| **4. மின்வலு நீர்** | **24.5** | **20.2** | **5.9** | **4.7** | **1.7** | **1.9** |
| 4.1 மின்வலு | 27.7 | 22.2 | 5.8 | 4.6 | 1.5 | 1.7 |
| 4.2 நீர் | 3.8 | 4.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| **5. கட்டடவாக்கம்** | **8.9** | **8.0** | **10.3** | **7.8** | **7.2** | **7.2** |
| **பணிகள்** | **6.2** | **8.3** | **57.6** | **62.6** | **55.7** | **56.2** |
| **6. மொத்த சில்லறை வர்த்தகம், சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும்** | **2.8** | **5.9** | **10.3** | **17.3** | **21.6** | **21.4** |
| 6.1 இறக்குமதி வர்த்தகம் | 2.3 | 7.5 | 3.8 | 10.0 | 9.8 | 9.8 |
| 6.2 ஏற்றுமதி வர்த்தகம் | 6.9 | 4.4 | 2.8 | 1.5 | 2.5 | 2.4 |
| 6.3 உள்நாட்டு வர்த்தகம் | 4.6 | 4.5 | 6.9 | 5.4 | 8.8 | 8.6 |
| 6.4 சுற்றுலாவிடுதி, உணவகங்கள் | - 27.5 | 6.3 | - 3.2 | 0.4 | 0.5 | 0.5 |
| **7. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்** | **11.7** | **13.1** | **28.4** | **27.2** | **15.3** | **16.2** |
| 7.1 போக்குவரத்து | 3.3 | 5.1 | 4.4 | 5.4 | 7.9 | 7.7 |
| 7.2 சரக்குக்கையாளல், களஞ்சியப்படுத்தல், பண்டகசாலை | 8.4 | 13.2 | 1.3 | 1.7 | 1.0 | 1.0 |
| 7.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு | 24.7 | 22.7 | 22.7 | 20.1 | 6.5 | 7.4 |
| **8. நிதியியல் பணிகள், உண்மைச்சொத்த, வர்த்தகப் பணிகள்** | **6.5** | **9.7** | **12.6** | **15.5** | **11.7** | **12.0** |
| 8.1 நிதியியல் பணிகள் | 7.5 | 10.5 | 11.5 | 13.5 | 9.5 | 9.7 |
| 8.2 உண்மைச்சொத்து, வாடகை மற்றும் வர்த்தகப் பணிகள் | 2.8 | 6.2 | 1.1 | 1.9 | 2.3 | 2.3 |
| **9. பொதுநிருவாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும், ஏனைய சமூகங்கள், சமூக தனியாளப் பணிகள்** | **5.4** | **2.8** | **6.4** | **2.6** | **7.0** | **6.7** |
| 9.1 பொதுநிருவாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும் | 5.1 | 1.5 | 3.7 | 0.9 | 4.3 | 4.1 |
| 9.2 ஏனைய சமூகங்கள், சமூக தனியாள் பணிகள் | 6.0 | 4.8 | 2.6 | 1.7 | 2.7 | 2.6 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **6.0** | **7.4** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | -46.2 | -31.1 | | | | |
| **மொத்தத் தேசிய உற்பத்தி** | **5.6** | **7.0** | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விளைவித்தன.

## 2.2 துறைவாரியான கொள்கைகளும் நிறுவன ரீதியிலான ஆதரவும் பிரச்சனைகளும்

**2006இல் வரவேற்கத்தக்க அபிவிருத்திகளாக உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த முதலீடு என்பன விளங்கின. இவ் உத்வேகம் தொடர்வதால் பொருளாதாரம் நடுத்தர காலத்தில் 8 சதவீதத்துக்கும் கூடுதலாக வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** எனினும் குறைவான, உள்நாட்டுச் சேமிப்பு வீதத்தைக் கருத்திற் கொள்கையில், எறிவு செய்யப்பட்ட உயர் வளர்ச்சிக்கு ஈடான உயர் முதலீட்டை நிதியிடுவதற்கு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மிகவும் முக்கியமாகும், எனவே, பொருளாதாரச் சூழல் முதலீட்டுக்கு உகந்ததாக தொடர்ந்து விளங்குவதும், முதலீட்டாளர் நம்பிக்கை உயர்வாக காணப்படுவதும் கட்டாயமானதாகும். இது தொடர்பாக, வடபகுதி மோதல்களுக்கு நிலைத்திருக்கும் சமாதானத்தை ஏற்படுத்தல், முதலீட்டை ஊக்குவிப்பதற்கு அமைப்பு ரீதியிலான தடைகளை நீக்குவதற்கு தேவையான சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்தல், கூடிய இறை ஒழுக்காற்று உட்பட்ட மதிநுட்பமான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம், அரசியல் உறுதிப்பாடு, அரசியல் நிச்சயமற்ற தன்மைகளைக் குறைத்தல் குறிப்பாக வலு மற்றும் வீதிகளிலான மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என்பன பொருளாதாரத்தின் எதிர்கால உள்ளார்ந்த வளத்தை அதிகரிக்கும் இன்றியமையாத காரணிகளாகும்.

### வேளாண்மை

**வேளாண்மை மீதான அரசின் கொள்கை உற்பத்தித்திறன் மேம்பாடுகளூடாக வேளாண்மையாளர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் அதிகரிப்பதை வலியுறுத்துகையில் நாட்டில் உணவுப் பாதுகாப்பையும் நுகர்வோருக்கு பாதுகாப்பான உணவுப் பொருட்களின் கிடைப்பனவையும் உறுதிப்படுத்துகிறது.** இதன்படி, வேளாண்மை அமைச்சானது, வேளாண்மை ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகளை மேம்படுத்தல், உயர் விளைச்சல் உள்ள விதைகளின் உற்பத்தியை அதிகரித்தல், பொருட்களைத் தரப்படுத்தலும், சான்றுப்பத்திரம் வழங்கலும் மற்றும் பொறியைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலான செயற்பாட்டுத் தொடர்களில் 2006இல் ஈடுபட்டிருந்தது. வரண்ட வலயப் பிரதேசங்களுக்கும், இரும்பு கலந்த

மணல் பகுதிகளுக்கும் பொருத்தமான நெல் இனங்களை விருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் அவ்வாறான 7 விதை இனங்கள் 2006இல் வெளியிடப்பட்டன. தரமான விதைகள் மற்றும் நாற்று வகைகளையும் வழங்குவதற்கு ஹொறனை, சீதாஎலிய, கிரான்துறுகோட்டை மற்றும் லபுதுவ ஆகிய இடங்களில் உள்ள பண்ணைகளிலும் மகா இலுப்பள்ளகம களப்பயிர் ஆராய்ச்சி நிலையத்திலும் விதைகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறப்பு வேளாண்மை உற்பத்தி வலயங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**2007 வரவு செலவுத் திட்டம் வேளாண்மையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான கொள்கைப் பொதியொன்றை முன் மொழிந்தது.** இக் கொள்கைகள், இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மீதான தீர்வை விலக்களிப்பை படிப்படியாக நீக்கல், உயர் பெறுமதியுடைய வேளாண்மை மற்றும் பதனிடல் செயற்பாடுகளை மேம்படுத்தல்: வேளாண்மை, கால்நடைகள், நன்நீர் மீன்பிடி, இறால் பண்ணை, பழம்,மரக்கறி, மலர் வளர்ப்பு, விதைவிருத்தி மற்றும் சேதன வளமாக்கியின் தயாரிப்பு போன்ற வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்களுக்கு பொறி, கருவி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கான கொடுகடனையும் வரித் தள்ளுபடியையும் வழங்கும் ஒருங்கிணைந்த பொதியை அமுல்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. அரிசிமா பதனிடலை நவீனப்படுத்துவதற்கு உள்நாட்டில் தயாரிக்கப்படாத பொறியை இறக்குமதி செய்வதற்காக பெறுமதிசேர் வரி மற்றும் இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான விலக்களிப்பை உள்ளடக்கிய மேலதிக ஊக்குவிப்புக்கள் அரிசி ஆலையாளர்களுக்கு வழங்கப்பட்டன. சிறிய அளவில் பயிர்களை வளர்ப்போர் முறைமை அடிப்படையில் பழம் மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு வரி மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களூடாக மையப் பண்ணைகள் ஊக்குவிக்கப்பட்டன. வேளாண்மைப் பதனிடலிலிருந்தான வருமானம் உள்ளடங்களான வேளாண்மை வருமானம் மற்றும் பெறுமதி கூட்டல் என்பன கூடுதலான முதலீட்டாளர்களை கவர்வதற்காக வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

**2006இல் விரிவாக்கப்பட்ட வளமாக்கி உதவுதொகை ஏற்பாடு சாதகமான வினைவுகளையும், பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தின.** வளமாக்கி உதவுதொகை வழங்கலின் கீழ் வேளாண்மைப் பணிகள் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட நெல் வேளாண்மையாளர்கள், 50 கிலோக்கிறாம் பொதி ஒன்று ரூ.350 ஐக் கொண்ட உதவுதொகை அளிக்கப்பட்ட வீதத்தில் வளமாக்கியைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையோராக விளங்கினர். இது சிறு போகத்தில் வயல் நிலங்களில் மிளகாய், சோளம், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், மற்றும் மரக்கறிகள் போன்ற துணை உணவுப் பயிர்களை உள்ளடக்கும் விதத்தில் மேலும் விரிவாக்கப்பட்டது. பின்பு 5 ஏக்கர்களுக்கும் குறைவான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் சிறு உடைமையாளர்களுக்கும் 50 கிலோக்கிறாம் பொதியைக் கொண்ட யூரியா ரூ.1,200 ஐக் கொண்ட குறைந்த அளவில் உதவு தொகை அளிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்பட்டன. உயர்ந்த அளவிலான உதவுதொகைகள், வளங்களின் வினைத்திறனற்ற பகிர்ந்தளிப்புக்கு இட்டுச் செல்லலாம், வெவ்வேறான பயிர்களுக்கு வெவ்வேறான உதவுதொகைத் திட்டங்கள் உற்பத்தியாளர் அதிருப்திக்கும், சந்தை திரிபுக்கும் இட்டுச்செல்லும் இத்துடன் 'உள்ளேயே கட்டுப்பட்டிருக்கும்' தொழில்நுட்ப விளைவுகளுடன் தொடர்பான உதவுதொகைகள் குறிப்பிட்ட பயிர்கள் மட்டும் பயிரிடக் கூடிய தன்மையை அதிகரித்தல் மற்றும் உயிரினப் பன்முகப்படுத்தலைக் குறைத்தல் என்பவற்றுக்கு இட்டுச் செல்லும் குறைந்த அளவில் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் கொள்கைகளுக்கு நகர்வதைத் தடுக்கக்கூடும். உள்நாட்டு உதவியிலான வீழ்ச்சி உற்பத்தியின் பல்வகைப்படுத்தலுக்கு சாதகமாக விளங்கி. இதன் மூலம் உயிரினப் பன்முகப்படுத்தலை மேம்படுத்துகிறது.

**உற்பத்தியாளர்களையும் அதுபோல் நுகர்வோரையும் பாதுகாப்பதற்கு நீடித்து நிலைத்திருக்கக் கூடியதும் நியாயமானதுமான சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை செய்யும் வலையமைப்பை நிறுவுவதை குறிக்கோளாகக் கொண்டு அரசு பல வழிமுறைகளை மேற்கொண்டது.** சந்தைப்படுத்தலை அதிகரிப்பதற்கும் வேளாண்மைப் பொருட்களுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதற்கும் வேளாண்மைப் பொருட்கள் சந்தைப்படுத்தல் அதிகாரசபை நிறுவப்பட்டது. கிலோக்கிறாம் ஒன்று ரூ.16.50 - 17.50 வீதம் நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு 2006இல் ரூ.3.387 மில்லியனை ஒதுக்கியது.

**உள்நாட்டு வேளாண்மையைப் பாதுகாக்க அரசு தீர்வைச் சீராக்கங்களை மேற்கொண்டது.** அரிசி இறக்குமதிக்கான கிலோக்கிறாம் ஒன்றுக்கான ரூ.9 கொண்ட அரிசி இறக்குமதிகள் மீதான கிலோக்கிறாம் விசேட தீர்வை கிலோக் கிறாமொன்றுக:கு ரூ.20 இற்கு அதிகரிக்கப் பட்டிருக்கையில் கோதுமைமா இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை 2.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்துக்கு அல்லது கிலோக் கிறாமொன்றுக்கு ரூ.4.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. இறக்குமதி கோதுமை தானியத்திற்கான சுங்கத் தீர்வையானது 2.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. பெரிய வெங்காயம் இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை கிலோக் கிறாமொன்றுக்கு ரூ.10 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் உள்நாட்டில் வெங்காயம் உற்பத்தி செய்வோருக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் மீது கிலோக் கிறாம் ஒன்றுக்கான ரூ.10 தீர்வை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.

**பெருந்தோட்டத்துறையில் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கு மேலும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.** தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடும் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொறி மற்றும் கருவிக்கு பெறுமதிசேர் வரி மற்றும் சுங்கத் தீர்வைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டன. வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2007 சனவரியிலிருந்து அமுலுக்கு வரும் வரையில், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பதனிடல் தொழிற்சாலைகளுக்கு பிரயோகிக்கத்தக்க பொருளாதார பணிக்கட்டணம் 0.5 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்துக்கு குறைக்கப்பட்டது. அதிகரித்துச் செல்லும் வலுச் செலவை சமாளிக்கும் பொருட்டு வலு மற்றும் சக்தியை சேமிக்கும் தொழில்நுட்பம் மீதான முதலீடுகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்ற நிதி உதவி மூலம் அரசு உதவியது.

**உலகளாவிய ரீதியில் தேயிலையின் அளவுக்கதிகமான வழங்கல் காரணமாக தரத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.** தீங்கு விளைவிக்கக்கூடிய பகுப்பாய்வின் அபாய கட்டுப்பாட்டுப் புள்ளி சான்றுப் பத்திரத்தைப் பெறுவதற்கு தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கான தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் குறைந்தளவான வட்டிவீத கொடுகடன் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் விளைவாக, 661 தேயிலைத் தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 34 தொழிற்சாலைகள் இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும் மேற்கூறப்பட்ட நற்சான்றிதழ் பத்திரங்களைப் பெற்றன. அதிகரித்துச் செல்:லும் கேள்வியை எதிர்கொள்ளுவதற்கு வெட்டி, கிழித்து சுருட்டும் தேயிலை மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தொழிற்சாலையில் ஏற்கனவே இருக்கும் வசதிகளை மாற்றாது மேலதிக சிரிசி பதனிடல் முறைகளைப் பேணுவதற்கு இலங்கைத் தேயிலைச்சபை அனுமதித்தது.

**தெங்குப் பயிர்ச்செய்கையின் கீழ்வரும் பரப்பளவை, அடுத்த சில ஆண்டுகளில் 1 மில்லியன் ஏக்கர்வரை அதிகரிப்பதற்கு அரசு இலக்கு வைத்துள்ளது.** இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெங்கைப் பயிரிட விரும்புவோருக்கு அரசு 2006இல் தென்னம்கன்றுகளையும் வளமாக்கியையும் இலவசமாக பகிர்ந்தளித்தது. தேவைப்பட்ட நிதியங்கள்

செஸ் நிதியததிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டன. தென்னை வளர்ப்போருக்கான தென்னம்கன்றுகளின் கிடைப்பனவுக்காக பல பிரதேசங்களில் 35 நாற்றுமேடைகள் பேணப்பட்டதுடன் தென்னம்கன்றுகளை உதவுதொகையளிக்கப்பட்ட விலைகளில் விற்கப்பட்டன. கூடிய எண்ணிக்கையில் தென்னை வளர்ப்போரை கவரும் பொருட்டு 2006இல் தெங்கு உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடனான ஒரு புதிய அணுகுமுறையாக, சுனாமியால் சேதமாக்கப்பட்ட தெங்கு நிலங்கள் புனரமைப்பு செய்யப்பட்டதுடன் சமுர்த்தி பெறுவோரின் காணிகளிலும் துண்டுகளாக்கப்பட்ட காணிகளிலும் தென்னையை மீள்பயிரிடுவதற்கு அல்லது புதிதாகப் பயிரிடுவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மழைநீர் அறுவடைக்கும் கிளிறிசிடியாவை தெங்கு நிலங்களில் பயிரிடுவதற்குமாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் 2006இல் மேலும் தொடர்ந்தது.

**மீன்பிடித்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பல நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** ஆழ்கடல் மீன்பிடியின் இயலளவை அதிகரிக்கும் பொருட்டு பலநாள் மீன்பிடி வள்ளங்கள் 55 பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கையில் நன்நீர் மீன் வளர்த்தலை ஊக்கப்படுத்துவதற்காக நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன. புத்தளம் மாவட்டத்தில் இறால் பண்ணையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக முந்தலில் இருந்து பாலாவி வரையிலான 14 கி.மீ நீளமான வண்டல் மண்படிந்த கால்வாய்ப்பகுதி செய்யப்பட்டது. அலங்கார மீன் செயற்றிட்டங்களூடாக சுயவேலை வாய்ப்பு மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும், பிரபல்யமாக்குவதற்கும் அலங்காரமீன் பரிமாற்றல் நிலையம் திறக்கப்பட்டது.மீன் கழிவுகளைப் பயன்படுத்தும் விலங்குணவுப்பொறி பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுவப்பட்டது. இறால் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வேளையில் இறால் இறக்குமதி மீது தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

**உள்நாட்டுப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை அரசு எடுத்துள்ளது.** தற்பொழுது, மொத்தக் கேள்வியில் கிட்டத்தட்ட 20 சதவீதமானவற்றையே உள்நாட்டுப் பால் உற்பத்தி ஈடுசெய்கிறது. இது 2010 அளவில் 30 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கிராமியப் பகுதிகளில் பாலின் சந்தைப்படுத்தலை விரிவாக்கும் அதேவேளை உள்நாட்டுப் பசுக்களினதும், எருமைகளினதும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்புக்கு பயன்படுத்தப்படக்கூடிய பசுக்கள், எருமைகளும் ஆடுகளும், ஆண் விந்துக்கள் மற்றும் கருக்களின் இறக்குமதி 2006இல் சுங்கத்தீர்வை மற்றும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. நாட்டில் விலங்குச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மிருக வைத்திய விசாரணை நிலையத்தை ஏற்படுத்துவதற்கும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துக்கு 177 மிருக வைத்தியர்களை நியமிப்பதற்கும் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. விலங்கு நோய் முகாமைத்துவம் மற்றும் உள்ளீடுகளினதும் வெளியீடுகளினதும், தர உத்தரவாதத்துக்கான ஒழுங்கமைப்பு தொழிற்பாடுகளுக்கு அரசதுறையின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு தனியார்துறை ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது.

**நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வேளாண்மை வளர்ச்சியை உற்பத்தித்திறன் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தல் மீதான கொள்கைகளில் கவனம் செலுத்துவதினூடாக அடையலாம்.** வேளாண்மை உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் தேசிய வளங்களை சிறந்த முறையில் முகாமை செய்வதற்கான உபாயங்களை உருவாக்குதல் என்பனவற்றில் வேளாண்மை ஆராய்ச்சி கவனஞ் செலுத்த வேண்டும். கேள்வியால் உந்தப்பட்ட விரிவாக்கப்பணிகளை ஊக்கப்படுத்தல், பண்ணை உள்ளீடுகளின் கூடிய வினைத்திறன் மிக்க பயன்பாடு மற்றும் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல் என்பன முக்கியமாகும். போட்டியற்ற தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்தல், புதிய கலப்பின விதை வகைகளை விருத்தி செய்தல், மண் முகாமைத்துவ தொழில் நுட்பங்கள், சிறு அளவிலான நீர்ப்பாசன குளங்களை புனரமைப்பு செய்தல், நீர் முகாமை முறைகளை மேம்படுத்தல், மற்றும் உவர்த்தன்மையைக் குறைத்தல் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறைந்த தரமுடைய விதைகளின் பயன்பாடு, பூச்சிகள் மற்றும் நோய்களின் தவறான முகாமை மற்றும் வளமாக்கியின் தவறான அல்லது போதுமானதற்ற பயன்பாடு என்பன அநேகமான வேளாண்மைப் பொருட்களின் குறிப்பாக மரக்கறிகளின் தாழ்ந்த உற்பத்தித் திறனுக்கு வழிகோலியது.

**சிறந்த சூழலை வழங்குவதனூடாக தனியார்துறை பங்கேற்பை அதிகரித்தல் தேசிய வரவுசெலவுத் திட்டம் மீதான சுமையைக் குறைக்கும்** நெல் கொள்வனவு பொறிமுறையின் கீழ். சந்தை விலை எதுவாக இருந்தாலும் அரசால் குறிப்பிடப்பட்ட நிலையான விலையில் வேளாண்மையாளர்களிடமிருந்து தரமான நெல்லின் முழு அளவையும் அரசு கொள்வனவு செய்ய வேண்டும். களஞ்சியப்படுத்தல் செலவுடனான இக் கொள்வனவுகள் தாங்கிருப்புக்களைப் பேணல் என்பனவற்றின் நிதியிடல் எப்போதும் பிரச்சனைக்குரியதாக விளங்கியதுடன் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் பாரிய சுமையையும் ஏற்படுத்துகிறது. மேலும், வேளாண்மையாளர்களின் நலன்புரி மீது அரசதுறைத் தலையீடு சிறிதாகவோ அல்லது எதிர்க்கணியமாகவோ காணப்படுகிறது. நெல் சந்தைப்படுத்தலில் தனியார்துறை ஈடுபாட்டை ஊக்கப்படுத்தல், முன்நோக்கிய சந்தை உடன்படிக்கைகளில் வேளாண்மையாளர்கள் நுழைவதை ஊக்குவித்தல், அரிசியை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்து அவற்றைப் பிரபல்யப்படுத்தல் மற்றும் மிகவும் தரமுள்ள அரிசியை உற்பத்தி செய்வதற்கு ஆலைகளின் இயலளவை அதிகரித்தல் என்பன அரசின் தலையீட்டைக் குறைக்க உதவும்.

**பெருந்தோட்டத்துறையில், அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை கரிசனைக்குரிய முக்கிய விடயங்களாகும்.** மிகவிரைவாக அதிகரித்துச் செல்லும் வலுச் செலவுகள் (விறகு,மின்வலு போன்றவை) மற்றும் அதிகரித்துச் செல்லும் தொழிலாளர் செலவுகள், உற்பத்திச் செலவின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளாகும், உற்பத்தித் திறனை மேம்படுத்தல், பயிர்களின் பன்முகப்படுத்தல், ஊடு பயிர்ச்செய்கை மற்றும் வலுவின் மாற்று மூலங்கள் மீதான முதலீடு என்பன உற்பத்திச் செலவைக் குறைக்க உதவும். குறிப்பாக, தேயிலை மற்றும் தேங்காய் பறித்தல், இறப்பர்பால் எடுத்தல் மற்றும் கறுவாப்பட்டை உரித்தல், என்பவற்றுக்கான

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பலும் கேள்வியும்



பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இல்லாமை பெருந்தோட்டத் துறையில் கடுமையான தடைகளாக விளங்குகின்றன. மொத்தத் தேயிலை உற்பத்தியின் 65 சதவீதமானளவுக்கு வகைகூறும் தேயிலை சிறு உடைமையாளர்கள் துறை தொழிலாளர் பற்றாக்குறையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. உற்பத்தித் திறனுடன் இணைந்த கூலி அமைப்பின் அறிமுகம் சாத்தியமான தீர்வாக அமையக்கூடும்.

**ஆரோக்கியமான வேளாண்மைக்குரிய காலநிலை மற்றும் முதலீட்டுச் சூழலை கருத்திற் கொள்கையில், நன்னீர் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு கைத்தொழிலின் விரைவான அபிவிருத்திக்கு பலமான உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.** அலங்கார மற்றும் நன்னீர் மீன் வகைகளை வளர்ப்பதற்கு நீர் நிலைகள் மற்றும் பொருத்தமான காணி வளங்கள் வடிவிலான இயற்கை வளங்களை நாடு கொண்டிருந்தபொதிலும் சில தடைகள் காரணமாக உச்ச பெறுபேறுகளை அடையும் விதத்தில் இவ் வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இல்லாமை, மாறுபாடு இல்லாமை, கேள்வியை எதிர்கொள்வதற்கான இடையூறு அற்ற வழங்கல் இல்லாமை தொழில்நுட்ப செயல் அறிவு இல்லாமை, போதுமானதற்ற இருப்பு மட்டங்கள், சமூகத்தின் குறைந்தளவு அங்கீகாரம் பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் இல்லாமை மற்றும் போதுமானதற்ற தனியார் பங்குடைமைகள் என்பன இந் நிலைமைக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளாக இருக்கக்கூடும்.

**ஆழ்கடல் மீன்பிடித்துறையிலுள்ள சில இடையூறுகள் அதன் உள்ளார்ந்த வளமிக்க வளர்ச்சியைத் தடுக்கின்றன.** மீன்பிடிக் கைத்தொழிலை விரைவுபடுத்த . மீன்பிடித் தொழில் நுட்பங்களின் போதுமானதற்ற பிரயோகம், மோசமான மீன்பிடி உட்கட்டமைப்பு, மீன் பிடிக்கப்பட்டமைக்கு பின்னரான தொழில்நுட்பங்கள் பிரயோகிக்காமை, மீன் கையாளலில் அறிவு இல்லாமை மற்றும் தரைக்குக் கொண்டுவந்த தரம் குறைந்த மீன்கள் என்பன கட்டுப்படுத்தப்பட வேண்டும்., போதுமானதற்ற ஐஸ்கட்டி உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல் போக்குவரத்து வசதிகள் மீனின் பெறுமதி கூட்டல், தர மேம்பாடு மற்றும் வினைத்திறன் மிக்க பகிர்ந்தளிப்பு என்பவற்றின் முயற்சிகளுக்கு தடையை ஏற்படுத்தின. அரசு ஆழ்கடல் மீன்பிடியை மேம்படுத்திய போதிலும் திட்டமற்ற முறையில் ஒரு நாள் படகுகளின் உட்புகுதல் பரவவைக் கடலின் மீனைப் படிப்படியாக குறைத்துவிட்டது.

## கைத்தொழில்

**அரசின் நீண்டகால கைத்தொழில் கொள்கையின் உந்துவிசையாக உலகளாவிய போட்டித் தன்மை வாய்ந்ததும், ஆற்றல் மிக்கதும் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் நுணுக்கம் வாய்ந்த கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வது விளங்குகிறது.** கைத்தொழில் கொள்கை செயல்முறைகள் மற்றும் பணிகளில் புதுமையைப் புகுத்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பவற்றை உண்டாக்குகிறது. இச் செயல்முறையில், மூலதனம் தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்ளும் வசதி மற்றும் சந்தைகளுக்கான நுழைவு என்பவற்றை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு முதலீடு முக்கிய பங்களிப்பை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இச் செயல்முறையை வசதிப்படுத்தும் பொருட்டு, சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பு கட்டமைப்பை பலப்படுத்தல், தேவையான உட்கட்டமைப்பை வழங்கல், கம்பனி ஆளுகையை மேம்படுத்தல், தூரத்தை அதிகரித்தலும் நியமங்களைப் பேணுதலும், கைத்தொழில்களின் போட்டித் தன்மையை மேம்படுத்தல், கொடுகடனைப் பெறுவதற்கான வசதியை இலகுபடுத்தல் மற்றும் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு அரசு பல வழிமுறைகளை ஆரம்பித்துள்ளது.

**பல்புடை, பிராந்திய மற்றும் இருபுடை கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கை ஏற்றுமதிகளின் உலகளாவிய சந்தை நுழைவு 2006இல் மேலும் விரிவடைந்தது.** நாடு உலக வர்த்தக அமைப்புக்கு வழங்கப்பட்ட கடப்பாடுகளை பின்பற்றும் அதேவேளை, இந்தியா, பாக்கித்தான் மற்றும் ஏனைய பிராந்திய நாடுகளுடன் இருபுடை வர்த்தக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. 2006இல் இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகள், குறிப்பிட்ட ஏற்றுமதிகளுக்காக இந்தியாவால் விதிக்கப்பட்ட அளவுக் கட்டுப்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணல் மற்றும் ஒருங்கிணைந்த பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தின் மேலதிக பேச்சுவார்த்தை என்பவற்றிலேயே காணப்பட்டன. முன்னுரிமைக்காக பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மூலப் பிரமாணங்களின் கடுமையான விதிகளை ஒழுங்குமுறைப்படுத்தலை நோக்காகக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இத்திட்டம் அவ்வாறான நன்மைகளுக்கு தகுதி பெறும்பொருட்டு, தைத்த ஆடைகளின் விடயத்தில் ஆகக் குறைந்தது 50 சதவீத பெறுமதி கூட்டலை இதிகரிக்குமாறு இலங்கையைத் தேவைப்படுத்துகிறது.

**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான அதன் கடப்பாடுகளை அரசு வலியுறுத்தியுள்ளது.** பரந்தளவிலான கைத்தொழில்மயப்படுத்தல் மற்றும் தொழில்நிலை வளர்ச்சியை அடைவதற்கான வழியாக சிறிய மற்றும் நடுத்தரஅளவு தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் கருதப்படுவதுடன், இது பெரிய அளவு மற்றும் நவீன கைத்தொழில் தொழில் முயற்சிகளுடனான பயிற்றுவித்தல் பிணைப்புக்களினூடாக தொழில்நுட்ப மாற்றல்கள் மூலம் பலப்படுத்தப்படும். மேலும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கு, தீர்வையற்ற இறக்குமதிகள், உள்ளூர் கைத்தொழில்களால் மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் வழங்கலுக்காக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளுக்கான வசதிகள் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களும் துணைப பொருட்களின் வழங்கல்கள் அபிவிருத்தி செய்தலும் போன்ற ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.

**பிரதேச கைத்தொழில்மயமாக்கத்தை ஊக்குவிப்பதற்கு அரசு பல வழிமுறைகளை எடுத்துள்ளது.** 2006இல் 8 புதிய கைத்தொழில்கள் நிறுவப்பட்டிருக்கையில் நலிவுற்ற 6 கைத்தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டிருப்பதுடன் 3 கைத்தொழில்கள் விரிவாக்கப்பட்ட வேளையில் 8 செயற்பட்டுக் கொண்டிருந்த கைத்தொழில்கள் *'நிபயும் சிறிலங்கா'* 300 தொழில் முயற்சிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே மீள அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான தொழிற்சாலைகளுக்காக 5 - 10 ஆண்டுகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்களிப்பு, புதிய பொறி மற்றும் தொழில் நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த பொறித் தொகுதியின் இறக்குமதிக்காக தீர்வைகள் மற்றும் பெறுமதி கூட்டல் வரியிலிருந்து விலக்களிப்பு உள்ளடங்கலாக ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது, முதலீட்டுச்சபை மற்றும் முதலீட:டுச்சபையல்லா செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களுக்கிடையேயான இடைவெளியை சமன் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பாரிய சவாலாகும். 300 தொழில் முயற்சிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீட்டுச்சபை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கும் நீடிக்கப்பட்டது. மேலும், மேல் மாகாணத்துக்கு வெளியே மீள அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அவற்றின் வரிவிதிக்கத்தக்க வருமானத்திலிருந்து மீள் அமைக்கும் செலவைக்கோர அனுமதிப்பதன் மூலம் ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

**உள்நாட்டு புடவைக் கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு வரவு செலவுத் திட்டம் 2007 வழி முறைகளை வழங்கியது.** புடவை நிறுவனங்களில் நடந்து கொண்டிருக்கும் படுகடன் மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டம் அரசுக்கும் வங்கிகளுக்கிடையே இடர்நேர்வை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆடைக் கைத்தொழிலில் துணைப் பொருட்களின் வழங்கலை அபிவிருத்தி செய்வதற்கு புடவை பதனிடும் வலயங்களை நிறுவுவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மேலும் தேசிய ஆராய்ச்சி சபையின் மேற்பார்வையின் கீழ் நனோ தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவுவதற்கும் வரவு செலவுத்

திட்டம் 2007 முன்மொழிந்துள்ளது. இது புடவை, இறப்பர், இலத்திரனியல் மற்றும் கனிப்பொருள் போன்ற பல கைத்தொழில்களின் போட்டித் தன்மையை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மின்வலு மற்றும் கைத்தொழில் எரிபொருள் மீதான உயர் தீர்வை வலுவை கூடியளவில் பயன்படுத்தும் பலகைத்தொழில்களின் பன்னாட்டு போட்டித்தன்மையைப் பேணுவது, பாரிய பிரச்சனையாக விளங்குகிறது.** இப்பிரச்சனையை இல்லாமல் செய்வதற்கு 2007 வரவு செலவுத்திட்டம் பார எரிபொருள் எண்ணெய், உலை எண்ணெய் மற்றும் மின்வலுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிப்பதை முன் மொழிந்தது.

**கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவன ரீதியிலான உதவி 2006இலும் தொடர்ந்தது.** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் வசதிப்படுத்தப்பட்ட ஏற்றுமதி மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்திக் கூட்டம் 2006இல் ஏற்றுமதியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தொழிற்பாட்டு மற்றும் ஏனைய பிரச்சனைகளைத் தீர்த்துள்ள வேளையில், முதலீட்டுச் சபையின் கீழான முதலீட்டாளர் வசதிப்படுத்தும் கூட்டம், காணியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மத்திய மற்றும் உள்ளூராட்சி அரசுகளிடமிருந்து பெறவேண்டிய சுற்றாடல் இசைவுச்சான்றிதழ் மற்றும் ஏனைய ஒப்புதல்களைப் பெற்றுக் கொள்வதில் கைத்தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்பட்ட நடைமுறையிலுள்ள தடைகளை நீக்குவதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவியது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரால் 2004இல் ஆரம்பிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டம் 2006இல் புடவை மற்றும் ஆடைகள், காலணி, தோல் பொருட்கள், மட்பாண்டங்கள், இறப்பர் மற்றும் மரமும் மர உற்பத்திகளும் ஆகிய இலக்கிடப்பட்ட உந்து விசையுள்ள கைத்தொழில்களின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு உதவியது. ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம், இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இது தேர்ச்சி அபிவிருத்திக்குத் தேவையான நிதியியல் உதவி, உணவு பதனிடல் கைத்தொழிலுக்கான தொழில்நட்ப உதவி, தர மதிப்பீடு மற்றும் தரச் சான்றிதழ் பத்திரங்கள் என்பவற்றை வழங்கியது.

**கைத்தொழில்துறை உயர் வளர்ச்சியை அடைவதில் பல இடையூறுகளை எதிர்கொள்கிறது.** அதிகரித்துச் செல்லும் வலுச்செலவு, மட்பாண்டம், சீமெந்து மற்றும் கண்ணாடி போன்ற உயர் வலுவை நுகரும் கைத்தொழில்களுக்கு சுமையாக அமைந்துள்ளது. கைத்தொழில் துறைக்கு நம்பகமானதும், தாங்கக்கூடியதும், சுத்தமானதுமான வலுவின் வழங்கல் உயர் கைத்தொழில் வளர்ச்சியை அடைவதற்கு மிகவும் முக்கியமாகும். இத்துடன், போதுமானதற்ற உட்கட்டமைப்பு, அதிகரித்துச் செல்லும் கூலியும் மூலப்பொருட்களும், தேர்ச்சி பெற்ற தொழிலாளர் இல்லாமை, கட்டடவாக்கக் கைத்தொழிலில் தொழில்நுட்ப ரீதியில் தகுதி வாய்ந்த ஆளணி இல்லாமை, தொழில் சந்தையில் காணப்படும் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் அரசதுறை தொழில் முயற்சிகளின் வினைத்திறனின்மைகள் ஆகிய பிரச்சனைகளைத் தீர்ப்பது அவசியத் தேவையாக விளங்குகிறது.

**இத்துறையின் மீள் எழுச்சியைப் பலப்படுத்துவதற்கு கைத்தொழில் துறையை மேலும் பன்முகப்படுத்தல் அவசியம் ஆகும்.** இலங்கையில் தொழிற்சாலைக் கைத்தொழில் ஆடைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் போன்ற ஒரு சில கைத்தொழில்களில் கூடியளவுக்கு தங்கியிருக்கிறது. எனவே, வெளிநாட்டு அதிர்வுகளைத் எதிர்த்து நிற்பதற்கு பன்முகப்படுத்தல் இன்றியமையாததாகும்.

**ஏற்கனவே நாட்டிலுள்ள கம்பனிகள் சில அதிகரிக்கும் வியாபார கொடுக்கல் வாங்கல் செலவு பற்றி சுட்டிக்காட்டியுள்ளதுடன் நிறுவனங்களின் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையையும் மெதுவடையச் செய்துள்ளன.** இறுக்கமானதும், சிக்கலானதுமான ஒழுங்குவிதிகள் ஊழல் தாமதங்கள் மற்றும் வளங்களின் விரயத்துக்கும் இட்டுச் செல்கின்றன. நாட்டுக்கு புதிய முதலீட்டாளர்களை கவருவதற்கான பாரிய தடைகளாக புதிய வியாபாரத்தைப் பதிவு செய்வதற்கு கூடிய நேரம் எடுக்கும் செயல்முறை, உரிமங்களைப் பெற்றுக்கொள்வதிலான தாமதம், கடுமையான தொழிலாளர் ஒழுங்கு விதிகள், சொத்தைப் பதிவு செய்வதற்கான செலவு, உயர் பணவீக்கம், கொடுகடன் தகவலின் குறைபாடு, கம்பனித் தொழிற்பாடுகளில் வெளிப்படையான தன்மை இல்லாமை, உயர் கம்பனி வரிவீதம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகளில் ஆவணத்தைக் கையாளலில் ஏற்படும் தாமதம் மற்றும் ஊழியர்களின் பணிகளை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பன விளங்குகின்றன. நீதிமன்ற விசாரணைகளிலான நீண்ட காலதாமதங்கள், நடைமுறையிலுள்ள சட்டங்களின் சிக்கல், வர்த்தக சட்ட விடயங்களில் நீதிபதிகள் குறைந்த அளவில் காணப்படுத்தல் மற்றும் நீதிமன்றங்களிலான வினைத்திறனற்ற ஆவணப்பதிவுகள் என்பவற்றால் எழும் உயர் சட்டச் செலவாலும் கைத்தொழில்துறை பாதிப்புக்குள்ளாகிறது.

### பணிகள்

**முன்மொழியப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் விரைவான நடைமுறைப்படுத்தல், பொருளாதாரத்தின் விரைந்த வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகிறது.** கொழும்பு தென்துறைமுகம், நிலக்கரி மற்றும் நீர்மின்வலு செயற்றிட்டங்கள், அதிவிரைவுப் பாதைகள் மற்றும் புகைவண்டிப்பகுதி போன்ற பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பொருளாதாரத்தின் விரைவானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கும் அத்தியாவசியமாதலால் தாமதங்களின்றி இவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். நிதியியல் கட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவ்வாறான செயற்றிட்டங்களை நிதியிடுவதில் அரச மற்றும் தனியார் பங்குடமை ஊக்குவிக்கப்படவேண்டும்.

இலங்கை மின்சபை, இலங்கைப் புகைவண்டி மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை போன்றவற்றால் உட்கட்டமைப்புப் பணிகளை வழங்கும் அரச தொழில் முயற்சிகளின் தொழிற்பாட்டு வினைத்திறன், உயர்ந்தளவிலான தொழிற்பாட்டுச் செலவைக் குறைப்பதற்காகவும் மற்றும் அரசின் வரவு செலவுத்திட்டச் சுமையைக் குறைப்பதற்காகவும் மேம்படுத்தப்படவேண்டும். நிறுவன ரீதியான சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல், நிதியியல் முகாமைத்துவத்தை மேம்படுத்தல், விரயத்தையும், இலஞ்சத்தையும் ஒழித்தல், புதுவிதமான பொருட்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பொருத்தமான ஏனைய நடைமுறைகள் என்பன இந்நிறுவனங்களின் நிதியியல் நிலைமையை மேம்படுத்த உதவும்.

## 2.3 வெளியீடு

### வேளாண்மை

**வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்துறை குறிப்பிடத்தக்களவில் மீட்சியடைந்ததுடன், 2006இல் கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் 4.7**

அட்டவணை 2.2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000=100)

| விடயம் | 2005(அ) | 2006(ஆ) | சதவீதமாற்றம் % 2006/05 |
|---|---|---|---|
| **வேளாண்மை, மீன்பிடி** | 103.2 | 108.8 | 5.4 |
| 1.வேளாண்மை | 110.2 | 111.5 | 1.2 |
| 1.1. வேளாண்மை உற்பத்திகள் | 108.8 | 111.1 | 2.2 |
| தேயிலை | 110.4 | 108.2 | -2.0 |
| இறப்பர் | 108.2 | 113.2 | 4.6 |
| தெங்கு | 90.6 | 96.7 | 6.7 |
| நெல் | 121.8 | 125.4 | 2.9 |
| ஏனைய பயிர்கள் | 106.6 | 108.7 | 2.0 |
| 1.2 கால்நடை | 123.4 | 114.9 | 6.9 |
| 2. மீன்பிடி | 159.8 | 92.0 | 53.9 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மொத்த உ.உற்பத்தியில் வேளாண்மைத்துறையின் பங்கனது 16.8 சதவீதமாக இருந்தது. 2006இன் சாதனைமிக்க நெல் அறுவடை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, மற்றும் மீன் உற்பத்தியின் பலமான மீட்சி இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. எனினும் தேயிலை உற்பத்தியிலான சிறிய வீழ்ச்சி, மெதுவடைந்து செல்லும் கோழிப்பண்ணைத் துறை வளர்ச்சி மற்றம் மோசமான காலநிலை மாறுபாடுகள் காரணமாக பழங்கள் மற்றும் மரக்கறிகளின் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சி என்பன இத்துறையின் உள்ளார்ந்த வளம் மிக்க வளர்ச்சியைக் குறைவடையச் செய்தது.

## ஏற்றுமதி வேளாண்மை

**தேயிலை உற்பத்தி 2006இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.** வளமாக்கி உதவுதொகைத்திட்டத்தின் திருத்தம், மோசமான வானிலை மாற்றங்கள் மற்றும் இவ்வாண்டின் பிற்பகுதியில் நிலவிய தொழிலாளர் அமைதியின்மை ஆண்டுத் தேயிலை உற்பத்தி 311 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைவதற்கு பங்களிப்புச் செய்தன. எனினும், இது கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி உற்பத்தியைவிட கூடியதாகும்.

**2006இல் இறப்பர் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து 4.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து 109 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்ததுடன் இது, 1996 இற்கு பதிவு செய்யப்பட்ட உச்ச உற்பத்தியாகும்.** அதிகரித்த கேள்வியுடன் இணைந்த கவர்ச்சிகரமான விலைகள் அதிகரித்த பால் எடுப்பதற்கான ஆர்வம், மழைத்தடுப்பிகளின் பயன்பாடு, உயர் விளைச்சலைக் கொடுக்கும் பதியங்களை பயிரிட்டமை வளமாக்கிப் பயன்பாடு போன்ற உற்பத்தித்திறன் மேம்பாடுகள் பலவற்றுக்கு இட்டுச் சென்றன. உற்பத்தியை அதிகரிப்பதில் வானிலையும் முக்கிய பங்கை வகித்தது. மசெண்ணெய் விலைகளின் சடுதியான அதிகரிப்பு செயற்கை இறப்பரின் விலைகளையும் அதிகரிக்கச் செய்தன. உயர் பன்னாட்டு விலைகள் காரணமாக, இறப்பரின் ஏற்றுமதியானது 2006இல் 47 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு 48 சதவீதத்தால் கூடியளவில் அதிகரித்தது. விலைகள் உயர்ந்தளவில் காணப்பட்ட போதிலும் உள்நாடு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் அதன் தளம்பலும் அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், உற்பத்திச் செலவு அதிகரிப்பைக் காட்டியது. உலக சந்தையில் இறப்பர் விலைகளின் தளம்பலுக்குத் தாக்குப்பிடிப்பதற்கு இறப்பரின் உற்பத்தித்திறன் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**அநேகமாக தென்னை பயிரிடும் சகல பிரதேசங்களிலும் சாதகமான மழைவீழ்ச்சிப் பரம்பலின் காலம் தாழ்த்திய விளைவாக நன்மையடைந்து, தெங்கு உற்பத்தி 2006இல் 6.7 சதவீதத்தால் அதிகரித்தது**. வளமாக்கிப் பிரயோகத்திலான அதிகரிப்பும் உற்பத்திளை அதிகரிப்பதற்கு பங்களிப்புச்

### அட்டவணை 2.3 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2005(அ) | 2006(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 317.2 | 310.8 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 193 | 193 |
| 1.4 உற்பததிச் செலவுகள் (ஈ) | ரூபா/கி.கி | 168.41 | 187.85 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 185.84 | 198.87 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 263.31 | 279.97 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,351 | 1,338 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 7 | 10 |
| 1.8 மொ.உ.உ. இன் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.9 | 1.8 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 104.4 | 109.2 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | 000 எக்டேயர்கள் | 116 | 118 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு(ஊ) | 000 எக்டேயர்கள் | 91 | 95 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 76.12 | 77.38 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலங்கள் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 147.41 | 187.97 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 147.73 | 204.70 |
| 2.6 மீள்நடுகை (எ) | எக்டேயர்கள் | 1,257 | 1,122 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 1,032 | 2,563 |
| 2.8 மொ.உ.உ.வின மூலமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.9 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | மில் காய்கள் | 2,515 | 2,684 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 395 | 395 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 7.50 | 8.00 |
| 33.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 12.46 | 10.86 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 13.04 | 14.39 |
| 3.5 மீள்நடுகை /கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 1,668 | 997 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 3,250 | 4,102 |
| 3.7 மொ.உ.உ.வின் மூலமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 2.1 | 1.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குபவரின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடல் மட்டும்
(ஊ) தொகை மதிபபுப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்செய்கைஉதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மை
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி மேலாண்மை சபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

### அட்டவணை 2.4 நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 2005(அ) | | | 2006(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 581 | 357 | 937 | 591 | 319 | 910 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 569 | 345 | 915 | 586 | 314 | 900 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | 000 எக்டேயர்கள் | 508 | 310 | 818 | 525 | 283 | 808 |
| உற்பத்தி | 000 மெற்றிக்தொன்கள் | 2,012 | 1,233 | 3,246 | 2,136 | 1,206 | 3,342 |
| | 000 புசல்கள் | 96,445 | 59,116 | 155,561 | 102,350 | 57,814 | 160,164 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 3,955 | 3,976 | 3,963 | 4,069 | 4,263 | 4,137 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன | 833 | 531 | 1,364 | 683 | 534 | 1,217 |
| அரிசி இறக்குமதிகள் | 000 மெற்றிக்தொன்கள் | - | - | 52 | - | - | 12 |
| இறக்குமதிகளின் நெல்லிற்குச்சமன் | 000 மெற்றிக்தொன்கள் | - | - | 76 | - | - | 18 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத் திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன்மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

செய்தது.

**கறுவா, கராம்பு, மிளகு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ மற்றும் பாக்கு போன்ற ஏனைய ஏற்றுமதி வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியும் 2006இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** முன்னேற்றகரமான தொழில்நுட்பம், வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட நடுகைக்குரிய பொருட்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பாவனையுடன் இணைந்து மீள்நடுகை மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களூடான உற்பத்தித்திறன் மேம்பாட்டின் முக்கிய காரணமாக கறுவா, முந்திரிப்பருப்பு மற்றும் மிளகின் உற்பத்தி முறையே 3.7 சதவீதத்தாலும், 7.3 சதவீதத்தாலும் 1.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. உள்ளீடுகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மோசமான களைபிடுங்கல் மற்றும் வளமாக்கிப் பிரயோகங்கள் போன்ற மோசமான வேளாண்மை முகாமை நடைமுறைகளை தோற்றுவித்தது.

## உள்நாட்டு வேளாண்மை

**2006 சிறுபோக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்ட போதும் மத்தியிலும் 2006இல் நெல் உற்பத்தி சாதனை மட்டமான 3,342,000 மெற்றிக்தொன்களைப் (2.9 சதவீத வளர்ச்சி) பதிவு செய்தது.** சிறந்த வானிலை நிலைமைகள், வளமாக்கியின் போதியளவு பிரயோகம் மற்றும் உயர் விலைகள் இச்சாதனைக்கு இட்டுச் சென்றன. 2005/06 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 6.1 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் சிறுபோகத்திலான உற்பத்தி 2.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சிறுபோக வீழ்ச்சி பருவகால மழையின் தாமதத்தால் ஏற்பட்டது.

**உள்நாட்டுச் சீனி உற்பத்தி 2006இல் மீட்சியடைந்தது.** சீனியை அடிப்படையாகக் கொண்ட உயிரின வாயு எரிபொருளின் அதிகரித்த பயன்பாடு காரணமாக அதிகரித்துச் செல்லும் உலக சீனி விலைகள் உள்நாட்டு சீனி உற்பத்திக்க மேலும் உற்சாக மூட்டின.

## காடு வளர்ப்பு

**காடாக்கல் துறை முதன்மைத் திட்டத்துடன் இணைந்து செல்லும் வகையில் காடு வளர்ப்பை மேம்படுத்துவதற்க ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** காடுகளின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட காட்டு மூலங்கள் முகாமைச் செயற்றிட்டத்தின் கீழ், முதிர்ச்சியடைந்த தேக்கு மற்றும் கற்பூரத்தைல மரங்களை வீழ்த்தி துப்பரவு செய்த பின்பு 1,843 எக்டேயர் காட்டு பெருந்தோட்டங்கள் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கையில் 1,254 எக்டேயரில் புதிய காடுகள் வளர்க்கப்பட்டன. 2006இல் 23 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளும் பயன்படுத்தப்படாத 22,300 எக்டேயர்களை காட்டு வளர்ப்புக்கு மாற்றின.

### அட்டவணை 2.5 விலங்கு வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2005 | 2006(அ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்குத் தொகுதி(எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.5 |
| கால்நடைகள் | 1.2 | 1.2 |
| எருமைகள் | 0.3 | 0.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 192.7 | 196.6 |
| பசும்பால் | 162 | 165 |
| எருமைகள் | 31 | 32 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 6.8 | 8.6 |
| 4. உற்பத்தியாளர் - பசும்பால் (ரூ.லீற்றர்) | 20.55 | 21.00 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 865 | 901 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 97.3 | 78.8 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் வேளாண்மை விலங்கு வளர்ப்பு அமைச்சு

### அட்டவணை 2.6 மீன் உற்பத்தி

மெற்றிக்தொன்கள் '000

| துணைத்துறை | 2005(அ) | 2006(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 130 | 216 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 33 | 35 |
| மொத்தம் | 163 | 251 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலங்கள்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்

## மீன்பிடி


**2006இல் வருடாந்த மீன் உற்பத்தி 251 மில்லியன் கிலோக்கிராம்களுக்க 54 சதவீதத்தால் அதிகரித்து பலமான மீட்சியை பிரதிபலிக்கிறது.** ஆழ்கடல் மற்றும் நன்னீர் மற்றும் அலங்கார மீன் உற்பத்தி முறையே 65.6 சதவீதத்தாலும், 7.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும், சில கரையோரப் பகுதிகளில் ஆழ்கடல் மீன்பிடி பாதுகாப்பு காரணங்களுக்காக தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மீன்பிடிக் கைத்தொழில் 2007இல் முழுமையாக மீட்சி அடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் மொத்த மின் உற்பத்தி சுனாமிக்கு முன்னரான உற்பத்தி மட்டத்தை விஞ்சி 300 மில்லியன் கிலோகிறாம்களை அடையும்.

## கைத்தொழில்

**2006 காலப்பகுதியில் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், தயாரிப்பு, கட்டடவாக்கம் மற்றும் மின்வலு மற்றும் வாயு என்பவற்றை உள்ளடக்கும் கைத்தொழிற்துறை 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது (2005இல் 8.3 சதவீதம்).** கைத்தொழிற்துறையின் பங்கு 27 சதவீதமாக மாறாதிருந்தது. வளர்ச்சிக்கான மிகப் பெரிய பங்களிப்பு துணைத்துறையான தயாரிப்புத்துறையின் பங்கு 16.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது (2005இல் 16.3 சதவீதம்).

**2005இல் 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 2006இல் 5.9 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது.** தளம்பலுறும் எண்ணெய் விலைகள், ஆடைக் கைத்தொழிலின் தீவிரப்படுத்தப்பட்ட உலகளாவிய போட்டி மற்றும் அதிகரித்துச் செல்லும் பாதுகாப்பு கரிசனை நிலைமைகள் காரணமாக

### வரைபடம் 2.3 கைத்தொழில் உற்பத்திகளின் உள்ளமைப்பு 2006



**அட்டவணை 2.7** கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (நிலையான 1990 விலைகளில்)

| வகை | சதவீத மாற்றம் | | ரூபா மில்லியன | |
|---|---|---|---|---|
| | 2005 | 2006(அ) | 2005 | 2006(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 55,430 | 58,756 | 4.8 | 6.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 97,576 | 101,772 | 4.9 | 4.3 |
| 3. மரம், மற்றும் மர உற்பத்திகள் | 1,659 | 1,709 | 3.1 | 3.0 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 4,000 | 4,136 | 3.0 | 3.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 50,720 | 54,930 | 12.5 | 8.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 19,777 | 21,933 | 6.2 | 10.9 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,600 | 2,759 | 5.9 | 6.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 10,825 | 11,161 | 3.0 | 3.1 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5,366 | 5,548 | 3.1 | 3.4 |
| மொத்தம் | 247,953 | 262,704 | 6.2 | 5.9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்தமை என்பவற்றால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் இவ்வளர்ச்சி அடையப்பட்டது. ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் உள்நாட்டு சந்தை சார்ந்த கைத்தொழில்களை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களும் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. தொழிற்சாலை கைத்தொழில்துறையின் வெளியீட்டில் 96 சதவீதத்துக்கு வகை கூறிய தனியார்துறைக் கைத்தொழில்கள் 2006இல் 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் அரசதுறைக் கைத்தொழில்கள் 7.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. தனியார்துறைக் கைத்தொழில்களின் இரு துணை வகைகளான முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச்சபையல்லாதவை முறையே 5.9 சதவீதத்தாலும் 5.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்து மொத்த தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீட்டிற்கு முறையே 55 சதவீதத்தையும், 45 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்தன.

**2006இல் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சிக்கான உந்துவிசை முக்கியமாக ஒன்பது கைத்தொழில் வகைகளில் நான்கிலிருந்தே வந்தது.** அவையாவன உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் புடவை, ஆடைகள் மற்றும் தோற் பொருட்கள் இரசாயன, இறப்பர் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள். இவ்வகைகள் 2006இன் கைத்தொழில்துறை வளர்ச்சியில் கிட்டத்தட்ட 90 சதவீதத்துக்கு வகை கூறின.

**ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கைத்தொழில்களில் முக்கிய மானவைகளாக புடவையும் ஆடையும், இறப்பர் கையுறைகளும் டயர்களும், பட்டை தீட்டப்பட்ட வைரம், இரத்தினக்கற்களும் ஆபரணமும், மட்பாண்டப் பொருட்கள், பிளாத்திக்குப் பொருட்கள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் விளங்கின.** இக்கைத்தொழில்கள், விரைந்த பேரண்டப் பொருளாதார வளர்ச்சி, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இந்திய மற்றும் பாகித்தான் போன்ற பிராந்திய நாடுகளுடனான வர்த்தகச் செயற்பாடுகளின் விரிவாக்கம், ஐரோப்பா, ஆசியா பசுபிக் மற்றும் சார்க் பிராந்தியத்திலுள்ள புதிய சிறிய சந்தைகளினுள் நுழைதல் மற்றும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளிலிருந்தான அதிகரித்த கேள்வி என்பவற்றால் நன்மையடைந்தன. சார்பு ரீதியிலான உயர் உள்நாட்டு பணவீக்கத்துக்கு மத்தியிலும், ரூபாவின் பெறுமானத்தேய்வு, உற்பத்தித்திறன் மேம்பாடுகள் மற்றும் அதிகரித்த சந்தைப்படுத்தும் ஆற்றல்கள் பன்னாட்டுச் சந்தையில் ஏற்றமதி போட்டித்தன்மையை பேண உதவின.

**உள்நாட்டு சந்தையை சார்ந்த கைத்தொழில்கள், பரந்தளவு கைத்தொழில் உற்பத்திகளைக் கொண்டு விளங்கின.** இவை, சீமெந்து, கட்டடவாக்கப் பொருட்கள், மட்பாண்டங்கள், உணவு, குடிபானங்கள், இரசாயனங்கள் மற்றும் வளமாக்கி என்பவற்றை உள்ளடக்குகின்றன. இவ்வுற்பத்திகளுக்கான கேள்வி, சம்பளங்களின் மேல் நோக்கிய திருத்தம், வளர்ச்சியடைந்து வரும் கட்டடவாக்கக் கைத்தொழில் மற்றும் வீதிகள், விரைவுப் பாதைகள், தொலைத்தொடர்பூட்டல், துறைமுகங்கள் போன்றவை தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பவற்றைத் தொடர்ந்து அதிகரித்த செலவழிக்கத்தக்க வருமானத்துக்கு ஏற்ப வளர்ச்சியடைந்தன. புதிய கைத்தொழில்களை நிறுவுதல் மற்றும் *'நிபயும் சிறீலங்கா'* 300 தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளை மீள அமைத்தல், துல்கிரிய ஆடை கட்டடத்தொகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் *'கமற்றகர்மாந்த'* நிகழ்ச்சித்திடடத்திலான முன்னேற்றம் என்பன உள்நாட்டு கைத்தொழிலை நோக்காகக் கொண்டவற்றின் உற்பத்தி இயலளவை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 2.8** முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2005(ஆ) | 2006(இ) | 2005(ஆ) | 2006(இ) | 2005(ஆ) | 2006(இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 85,934 | 94,086 | 100,615 | 110,365 | 14.6 | 14.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 22,546 | 23,532 | 25,734 | 26,942 | 12.4 | 12.7 |
| 3. மரம், மற்றும் மர உற்பத்திகள் | 1,689 | 1,813 | 1,913 | 2,050 | 11.7 | 11.6 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5,107 | 5,721 | 5,820 | 6,544 | 12.3 | 12.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 36,075 | 42,160 | 42,625 | 49,965 | 15.4 | 15.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 22,005 | 25,167 | 25,952 | 29,878 | 15.2 | 15.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,461 | 2,832 | 2,865 | 3,305 | 14.1 | 14.3 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 13,794 | 15,258 | 15,933 | 17,679 | 13.4 | 13.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 3,356 | 3,630 | 3,792 | 4,113 | 11.5 | 11.7 |
| மொத்தம் | 192,967 | 214,199 | 225,249 | 250,841 | 14.3 | 14.6 |

(அ) 510 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 2.9 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ) (மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2005 | 2006 | 2005 | 2006 | 2005 | 2006 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 3.2 | 3.4 | 10.2 | 10.1 | 39.8 | 39.7 | 1.1 | 1.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.4 | 4.5 | 15.1 | 15.2 | 13.0 | 13.1 | 2.2 | 2.3 |
| 3. மரம், மற்றும் மர உற்பத்திகள் | 9.2 | 9.1 | 16.4 | 16.1 | 32.8 | 33.2 | 4.2 | 4.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3.9 | 4.1 | 13.1 | 13.2 | 19.1 | 19.5 | 3.6 | 3.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 6.0 | 6.4 | 13.0 | 13.3 | 29.8 | 30.4 | 3.4 | 3.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 19.3 | 19.9 | 14.9 | 14.9 | 28.9 | 29.2 | 2.9 | 3.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 9.7 | 9.9 | 11.2 | 11.3 | 35.8 | 35.9 | 2.5 | 2.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 4.9 | 5.0 | 12.1 | 12.2 | 27.0 | 26.9 | 3.9 | 4.0 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5.3 | 5.2 | 11.9 | 12.0 | 34.8 | 34.6 | 1.5 | 1.4 |
| மொத்தம் | 6.0 | 6.3 | 12.0 | 12.3 | 31.4 | 32.1 | 2.2 | 2.3 |

(அ) 510 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**புடவை அணியும்ஆடை மற்றும் தோல் பொருட்கள் துறை, 2005இல் எய்தப்பட்ட 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2006இல் 4.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இத்துணைத்துறை 2006இல் தொழிற்சாலைக் கைத்தொழிலின் மொத்த வளர்ச்சிக்கு 39 சதவீதத்தை பங்களிப்புச் செய்தது. இத்துறையிலான மிதமான வளர்ச்சியானது, சீனா, இந்தியா, வியட்னாம், வங்காளாதேசம் மற்றும் பாகித்தான் போன்ற குறைந்த உற்பத்திச் செலவைக் கொண்ட நாடுகளிலிருந்தான அதிகரித்த போட்டியின் விளைவாக காரணமாக ஐக்கிய அமெரிக்காவுக்கான தைத்த ஆடைகள் ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக பெரும்பாலும் ஏற்பட்டது. எனினும், இது முன்னுரிமைக்காக பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தீர்வையற்ற சலுகைகளிலிருந்து நன்மையடைந்து ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி மூலம் ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகள் 2006இல் 17.3 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், தைத்த ஆடைகள் ஆகக் குறைந்தது 50 சதவீத உள்நாட்டு பெறுமதி கூட்டலை உள்ளடக்கியிருக்க வேண்டுமென்பதை தேவைப்படுத்தும் மூலப்பிரமாணத்தின் இறுக்கமான விதிகளுடன் இணங்கிச் செல்வதில் காணப்பட்ட இடர்பாடுகள் காரணமாக இத்திட்டத்தின் முழு அளவிலான நன்மையும் இதுவரை பெறப்படவில்லை. ஆடைக் கைத்தொழிலிலுள்ள சில தயாரிப்பாளர்கள் அதிகரித்த உற்பத்தி விசேடத்துவம், தொழிற்சாலைகளை இணைத்தல் மற்றும் கையேற்றல் ஆடைத்துணைப் பொருட்களை வழங்குபவர்களுடனும் இறக்குமதி நாடுகளிலுள்ள வர்த்தகர்களுடனுமான இணைப்புக்களை அபிவிருத்தி செய்தல், உற்பத்திகளின் தரத்திலான மேம்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆற்றல்களின் அதிகரிப்பு என்பவற்றை மேற் கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். முன்னுரிமைகளுக்கான பொதுவாக்கப்பட்டமுறை திட்டத்தின் கீழ் பெறப்பட்ட சலுகைகளுடன் தோல் பொருள் கைத்தொழிலும் சிறப்பாகச் செயலாற்றியது.

**பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தைக்கு விற்பனை செய்யும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் 6.0 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்து 2006இல் மொத்த வளர்ச்சிக்கு 22 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது.** இவ்வுயர் வளர்ச்சி, பதனிடப்பட்ட உணவு, பானங்கள், குடிவகை, ஐஸ்கிறீம், விசுக்கோத்துகள், பால் உற்பத்திகள், கனிமநீர், பழங்களும் மரக்கறிகளும் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட பொருட்கள் என்பவற்றின் முன்னேற்றமான செயலாற்றத்தால் ஏற்பட்டது. பழங்களுக்கும் மரக்கறிகளுக்கும் ஐக்கிய இராச்சியத்திலிருந்தான அதிகரித்த கேள்வி மற்றும் விசுக்கோத்துகளுக்கு பிராந்திய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அதிகரித்த கேள்வி இக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு உதவின. எனினும் தொடர்ச்சியான விழிப்புணர்வு , புகையிலை மற்றும் மதுபானங்களுக்கான சட்டத்தின் மீதான தேசிய அதிகாரசபை அமுல்படுத்தப்பட்டமை என்பன காரணமாக வீழ்ச்சியடைந்தன.

**இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் வெளியீடு 2006இல் 8.3 சதவீதத்தால் அதிகரித்தது.** இத்துணைத்துறையின் வளர்ச்சிக்கான முக்கிய உந்துவிசை, முக்கியமாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் பிவிசி உற்பத்திகள், இரசாயனம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து வந்தது. கட்டடவாக்கச் செயற்பாடுகளின் விரைந்த வளர்ச்சியைத் தொடர்ந்து பிளாத்திக்கு மற்றும் பிவிசி உற்பத்திகளின் வெளியீடு 11.5 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் 2005இல் எய்தப்பட்ட 25.0 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 10.4 சதவீதத்தால் அதிகரித்தன. இது முக்கியமாக 2006இல் ஐக்கிய அமெரிக்கா சந்தைக்கு டயர்களில் ஏற்றுமதியிலேற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். எனினும், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்தது.

**உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 2006இல் 10.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இத்துணைத்துறையிலான உயர் வளர்ச்சி, சீமெந்து, மட்பாண்டங்கள், கட்டடப் பொருட்கள் மற்றும் பட்டை தீட்டப்பட்ட வைரங்களால் உந்தப்பட்டதாகும். கட்டடவாக்கத்துறை மற்றும் உட்கட்டமைப்புத்துறைச் செயற்றிட்டங்களின் அதிகரித்த

### அட்டவணை 2.10 முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் சுட்டெண் (அ)

1995=100

| வகை | 2005 | 2006 | Change (%) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 132.5 | 135.8 | 2.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 113.2 | 117.3 | 3.6 |
| 3. மரம், மற்றும் மர உற்பத்திகள் | 103.1 | 105.5 | 2.4 |
| 4. தாளும் தாள் உற்பத்தி | 103.7 | 106.3 | 2.5 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 139.5 | 144.8 | 3.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 114.5 | 117.4 | 2.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 103.0 | 105.3 | 2.3 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 123.8 | 127.5 | 3.0 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 110.7 | 113.7 | 2.7 |
| மொத்தம் | **119.7** | **123.5** | **3.2** |

(அ) முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

செயலாற்றத்துடன் சீமெந்து, மட்பாண்டங்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தன. அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வியை எதிர்கொள்ளும் பொருட்டு சீமெந்து மற்றும் கட்டடப்பொருட்களின் முக்கிய தயாரிப்பாளர்கள் அவர்களின் இயலளவை அதிகரித்தனர். கண்ணாடிப் போத்தல் தயாரிக்கும் கைத்தொழில் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில் அவற்றின் இயலளவை விரிவாக்கியதுடன் ஏற்றுமதிச் சந்தைக்கான விசேட பொருட்களையும் உற்பத்தி செய்தன.

**உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 2006இல் 3.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.** உள்நாட்டுக் கேள்வி தொடர்ந்து அதிகரித்திருக்கையில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியுடன் ஏற்றுமதிகளும் மேலும் மேலும் அதிகரித்தன.

**அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு 2006இல் 7.6 சதவீதத்தால் அதிகரித்தன.** இது, அரசதுறை கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்திற்கு வகை கூறிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழிநடத்தப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 2006இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. செவனகல சீனிக் கைத்தொழில் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ற் என்பவற்றின் வெளியீடு 2006இல் முறையே 27.4 சதவீதத்தாலும் 20.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன.

**2006இல் அளவீடு மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுச்சபையல்லா நிறுவனங்களின் உற்பத்தியின் தொழிற்சாலை மட்டத்திலான பெறுமதிக்கு மொத்த உற்பத்தி செலவின் விகிதமாக மதிப்பிடப்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழிலின் இலாப விகிதம் 2006இல் 14.6 சதவீதமாக விளங்கியதுடன் 2005 உடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அதிகரித்த உள்நாட்டு விற்பனைகள், பயன்தரும் வகையில் மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல், மேலதிகச் செலவுகளின் சிறந்த முகாமை, புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றியமை, விரயக் குறைப்பு , அதிகரித்த தொழிலாளர் உற்பத்தித்திறன், செயற்படு மூலதனத்தின் சிறந்த முகாமைத்துவம், மனித வலுவின் பயன்மிக்க பயன்பாடு, இலாபமீட்டாத பிரிவுகளை மூடியமை மற்றும் பயன்மிக்க விலையிடல் கொள்கைகள் என்பன நிறுவனங்களின் இலாபகரத்தன்மையைப் பேண உதவியது. தகவல் தொழில்நுட்பத்தின் தீவிர பயன்பாடானது உபாயமான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் சந்தைப்படுத்தலை முன்னேற்றுவதற்கு உதவியதுடன், கூடியளவு செலவுச்சிக்கனத்தை அடைவதற்கும் இட்டுச் சென்றது. வலு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் அதிகரித்த செலவு 2006இல் நிறுவனங்களின் உற்பத்திச் செலவை அதிகரித்தன. எனினும், அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு மாற்று வலுமூலங்களின் பயன்பாடுகளூடாகத் தணிக்கப்பட்டது.

**தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூலிச்செலவு 17.4 சதவீதத்தால் அதிகரித்ததுடன், மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக 12.0 சதவீதத்திலிருந்து 2006இல் 12.3 சதவீதத்துக்கு அதிகரித்தது.** கூலிகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் படிகள், உயர் பணவீக்கம் மற்றும் இவ்வாண்டில் உற்பத்திச் செலவு மீதான பணவீக்க எதிர்பார்ப்பு என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டன. அதிகரித்துச் செல்லும் கூலிச் செலவை கட்டுப்படுத்தும் பொருட்டு செலவைக் குறைக்கும் வழிமுறைகள் பல நிறுவனங்களால் எடுக்கப்பட்டுள்ளன. இவை ஏற்கனவே இருக்கும் மனிதவலுவின் பயன்தரும் வகையிலான பயன்பாடு, மேலதிக நேர கொடுப்பனவை ஒழுங்குமுறைப்படுத்தல், உற்பத்தித்திறனை மேம்படுத்தல், சாத்தியமான உயர் செலவுடைய பிரிவுகளை வெளிமூலங்கள் மூலம் பெற்றுக் கொள்ளல் மற்றும் அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. கடன்பாட்டுச் செலவு தொடர்ந்து அதிகரித்தமையால் மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வட்டிச் செலவுகள் சிறிதளவால் அதிகரித்தது.

**குறிப்பாக வானிலை நிலைமைகளால் மோசமாக பாதிப்புக்குள்ளான தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சி மற்றும் இவ்வாண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பெருந்தோட்டப் பயிர்கள் பதனிடல் துணைத்துறையால் உருவாக்கப்பட்ட பெறுமதி கூட்டல் 1.1 சதவீதமான சிறிதளவு வளர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தது.** இத்துணைத்துறையின் வளர்ச்சி தெங்கின் உயர் உற்பத்தி மற்றும் உள்நாட்டுச் சந்தையிலும், வெளிநாட்டுச் சந்தையிலுமான உயர்விலைகளுடன் அதிகரித்த கேள்வியைக் கொண்டிருந்த இறப்பர் என்பவற்றால் ஏற்பட்டது.

**2005இல் 9.8 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான விரிவாக்கத்தைப் பதிவு செய்த சிறுகைத்தொழில் துணைத்துறை 2006இல் 5.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** கட்டடவாக்கத் துறையிலான விரிவாக்கம் மர ஆலைகளின் சிறிய அளவிலான உற்பத்தி, கல்லுடைத்தல், ஓடுகள், செங்கற்கள், சீமெந்துக் கற்கள் மற்றும் தொடர்பான கட்டடப் பொருட்கள் என்பவற்றின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தளபாடம் மற்றும் தச்சுத்தொழில், வெதுப்பக உற்பத்திகள், ஆபரணங்கள், ஆடைகள் மற்றும் கைத்தறிகள், தோல்காலணிகள் மற்றும் ஏனைய உற்பத்திகளின் சிறு அளவிலான கைத்தொழிற் செயற்பாடுகளும் அதிகரித்த நுகர்வோர் கேள்வியுடன் பெறுமதி கூட்டப்பட்ட பங்களிப்பு நியதிகளில் விரிவடைந்தன. வேளாண்மை வெளியீடுகளின் அதிகரிப்புடன் ஒன்றன் பின் ஒன்றாக நெல் குற்றல் மற்றும் ஏனைய அரைத்தல் செயற்பாடுகள் விரிவடைந்த போதிலும், இது முன்னைய ஆண்டினதை விட குறைவாகவே காணப்பட்டது.

**மின்வலு மற்றும் நீர்த்துறை 2006இல் தொடர்ந்து விரிவடைந்தது. 2005இல் 24.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த இத்துறை நடப்பாண்டில் 20.2 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது.** இத்துறையிலான உயர் வளர்ச்சி வீதம், இவ்வாண்டில் பெறுமதி கூட்டல் நியதிகளில் 22.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மின்வலு துணைத்துறையின் விரிவாக்கத்தினூடாக அடையப்பட்டது. இவ்வாண்டில் இரு தடவைகள் மேல் நோக்கத் திருத்தப்பட்ட தீர்வை வீதங்களிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் வீட்டுப்பாவனை, கைத்தொழிலும் வர்த்தகமும் மற்றும் ஏனைய துறைகளிலிருந்து மின்வலுவுக்கான கேள்வி 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2006இல் நீர்மின்வலு உருவாக்கம் 34.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், வெப்ப மின்வலுவுக்கான தேவை, நீரேந்து பகுதிகளில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக தூண்டப்பட்ட நீர்மின்வலுவின் உருவாக்கத்தால் ஓரளவிற்கு பிரதியீடு செய்யப்பட்டது. மொத்த வலு உருவாக்கத்தில் நீர்மின்வலுவின் உருவாக்கம் 2005இன் 39.4 சதவீதத்திலிருந்து 49.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. சேகரிப்பு, தூய்மையாக்கல் மற்றும் குழாய் நீர் பகிர்ந்தளிப்பை உள்ளடக்கும் நீர் துணைத்துறை 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது (2005இல் 3.8 சதவீதம்). பொதுமக்களுக்க அடிப்படைத் தேவையான நீரை கிடைக்கச் செய்வதற்கு இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட நிர்மாணச் செயற்பாடுகள் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**ஒன்றன்பின் ஒன்றாக கல்லுடைத்தல் துணைத்துறையில் விரிவாக்கத்தைக் காட்டிய இவ்வாண்டிலான கட்டடவாக்கச் செயற்பாடுகளின் செழிப்பால் உதவப்பட்டு சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை உண்மை நியதிகளில் 8.0 சதவீதத்தால் (2005இல் 14.1 சதவீதம்) விரிவடைந்தது.** சுரங்கமகழ்தல் துணைத்துறை 2006இல் 8.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் வளர்ச்சி இத்துணைத்துறையின் வளர்ச்சிக்கு உதவியது. கனிய மணல் மற்றும் பொசுபேற்று உற்பத்தி தொடர்பான சுரங்கமகழ்தல் செயற்பாடுகள் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்திருக்கையில் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் காரீய உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்டது.

**2005இல் சார்பு ரீதியிலான 8.9 சதவீத உயர் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் கட்டடவாக்கத்துறை 8.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** சுனாமி தொடர்பான நிர்மாண வேலை குறிப்பாக வீடமைப்பு செயற்றிட்டங்களின் நியதிகளில் 2006இலும் தொடர்ந்து முன்னேறிய போதிலும், அவசரமாகத் தேவைப்பட்ட மீள்கட்டுமானப் பணிகள் 2005இல் நடைபெற்ற போது காணப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தை விட குறைவான வீதத்திலேயே காணப்பட்டது. வீதி வலையமைப்பின் அபிவிருத்தி தொடர்பான நிர்மாணச் செயற்பாடுகள் மற்றும் வலுத் துறையிலான மேம்பாடுகளுடன் இணைந்து நீர் மூலங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்கள் வெளிநாட்டு நிதியிடல் மூலமான செலவலும் கணிசமான பங்கை நுகர்ந்தன. இத்துறையின் விரிவாக்கம், உள்நாட்டில் உற்பத்தி செய்த மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கட்டடவாக்கப் பொருட்களின் நுகர்வின் வளர்ச்சியிலும் பிரதிபலிக்கப்பட்டது. கட்டடவாக்கத் துறையின் செயற்பாட்டு மட்டங்களின் முக்கிய குறிகாட்டியான சீமெந்து பாவனை 2006இலும் குறிப்பிடத்தக்களவில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. வீடமைப்பு மற்றும் தொடர்மாடிச் செயற்றிட்டங்களில் தனியார்துறை கட்டடவாக்கம் இவ்வாண்டில் விரிவடைந்தது. இது வீடமைப்பு நிர்மாணங்களின் நோக்கத்துக்காக வங்கித்தொழில் துறையிலிருந்து பெறப்பட்ட முற்பணங்களில் வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. ஆனால், கட்டடவாக்கப் பொருட்களின் குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்பு, குறிப்பாக சிறு அளவிலான கட்டடவாக்கச் செயற்பாடுகளை ஊக்கமிழக்கச் செய்யும் விளைவைக் கொண்டிருந்தது. கட்டடவாக்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட விலைச் சுட்டெண்களில் கட்டடவாக்கப் பொருட்களின் பொதுவான விலை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இது 2005இன் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பாகும்.

## பணிகள்

**முன்னைய ஆண்டுகளைப் போலவே பணிகள் துறையின் வளர்ச்சி 2006இன் வளர்ச்சிக்கு முக்கிய உந்து விசையை வழங்கியது.** பணிகள்துறை 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சியின் கிட்டத்தட்ட 56.2 சதவீதத்துக்கு வகை கூறியது. இத்துறையில் பிரதிபலிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சி முக்கியமாக நாட்டில் உள்ள பணிகளுக்காக அதிகரித்துச் செல்லும் நுகர்வோர் கேள்வியுடன் இணங்கிச் செல்லும் வகையில் காணப்பட்டது. பொருளாதார பணிகள் மற்றும் உட்கட்டமைப்பிலான முதலீடு மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய பங்களிப்பாளராக பணிகள்துறை தோற்றம் பெற்று வருவதற்கு வழியமைத்தது.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை, முன்னைய ஆண்டின் குறைவான வளர்ச்சியிலிருந்து மீட்சியடைந்து 7.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த இறக்குமதி வர்த்தகத்தின் முன்னேற்றகரமான செயலாற்றத்தின் பெருமளவு காரணமாக 5.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது (2005இல் 2.8 சதவீதம்).** இறக்குமதி வர்த்தகத்தின் அமைப்பு உள்நாட்டுக் கேள்வியின் விரிவாக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி அளவு நியதிகளில் 10 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 8.8 சதவீதத்தால் அதிகரித்தன. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளினுள், கோதுமைத்தானியம் மற்றும் சீனி போன்ற அடிப்படை உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்திருக்கையில் 2006இல் பதிவு செய்யப்பட்ட அமோக விளைச்சல் காரணமாக அரிசி இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. உந்து ஊர்திகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்ற ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 11.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. முதலீட்டுப் பொருட்கள் வகையினுள், கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள், கட்டடவாக்கத் துறையில் விரிவாக்கத்தைப் பிரதிபலித்த உயர் தளத்துடன் ஒப்பிடுகையில் 3.4 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் போக்குவரத்துக் கருவியின் இறக்குமதி முன்னைய ஆண்டின் 11.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெய் ஏனைய பெற்றோலியம் மற்றும் ஏற்றுமதிச் சந்தைக்கும், உள்நாட்டுச் சந்தைக்கும் பொருட்களை வழங்கும் கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களின் இறக்குமதிகளிலான அதிகரிப்புடன் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அளவும் 5.0 சதவீதத்தால் அதிகரித்தன.

**ஏற்றுமதி வர்த்தக துணைத்துறை முன்னைய ஆண்டின் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 4.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இம்மெதுவடைவு குறிப்பாக கைத்தொழில் ஏற்றுமதிகளில் உணவு, குடிபானங்கள், புகையிலை, இறப்பர் உற்பத்திகள் போன்றவற்றை உள்ளடக்கும் ஏனைய கைத்தொழில் வகையிலான குறைந்த வளர்ச்சி காரணமாக பகுதியளவில் ஏற்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான முக்கிய பங்களிப்பாளரான புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏனைய வகைகள் முறையே 27.4 சதவீதத்தாலும், 0.8 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன. சகல மூன்று முக்கிய பெருந்தோட்டப் பயிர்களின் உயர் ஏற்றுமதியுடன் வேளாண்மை ஏற்றுமதிகள் 5.6 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பர் ஏற்றுமதிகள் 2005இன் 17.5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 42.8 சதவீதத்தால் கணிசமானளவில் விரிவடைந்தன. இறப்பரின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட 43 சதவீத சராசரி அதிகரிப்பும் ஏற்றுமதிகளைத் தூண்டின.

**உள்நாட்டு வர்த்தக துணைத்துறை முக்கியமாக உள்நாட்டு வேளாண்மை மற்றும் கைத்தொழில் துணைத்துறைகளிலான திருப்திகரமான செயலாற்றத்தால் உந்தப்பட்டு 4.5 சதவீதத்தால் விரிவடைந்தது.** நெல் உற்பத்தி, மீன்பிடி, சிறுகைத்தொழில் மற்றும் உள்நாட்டு தொழிற்சாலைக் கைத்தொழில்கள் இவ்வளர்ச்சிக்குக் கூடுதலாகப் பங்களிப்புச் செய்தன. எனினும், அண்மைக் காலத்தில் பாதுகாப்பு வழிமுறைகள் பலப்படுத்தப்பட்டுள்ளமை, நாட்டில் உள்நாட்டு வர்த்தக செயற்பாடுகளின் விரிவாக்கத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்தியது.

**சுனாமிக்குப் பின்னரான தாழ்ந்த தளத்துடன் ஒப்பிடுகையில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 1.9 சதவீத அதிகரிப்புடன் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை 6.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** எனினும், இத்துறை இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நாட்டில் நிலவிய அதிகரித்துச் செல்லும் பாதுகாப்பு கரிசனைகளால் பாதிக்கப்பட்டது. சுற்றுலாக் கைத்தொழில், சுனாமியால் பாதிக்கப்பட்ட அழிவுகளிலிருந்து அநேகமாக முழுமையாக மீட்சி அடைந்து இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் 20 சதவீத வளர்ச்சியை அறிவித்த போதிலும் இக்கைத்தொழில் இரண்டாம் அரைப்பகுதியில் 5.8 சதவீத வீழ்ச்சியை அறிவித்தது. நாடு முழுவதிலுமுள்ள சுற்றுலாக்குடில்கள் மற்றம் நகர சுற்றுலா விடுதிகளில் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டிலான குறைந்தளவான அறையில் தங்கும் வீதம் சுற்றுலா துணைத்துறையை மோசமாகப் பாதித்தது. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 0.6 சதவீதத்தால் மட்டும் அதிகரித்திருக்கையில் ஆசிய உபகண்டத்திலிருந்தான வருகைகள் 8.4 சதவீதத்தால் தொடர்ந்து அதிகரித்தது. இவ்வாண்டில், சுற்றுலா வருகைகள் சிறிதளவால் அதிகரித்த போதிலும் தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 15.4 சதவீதத்ததால் அதிகரித்தன.

**பணிகள் துறையில் அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத்துறையிலான செழிப்பான விரிவாக்கத்தின் முக்கிய காரணமாக போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்துறை 13.1 சதவீதத்தால் விரிவடைந்தது (2005இல் 11.7 சதவீதம்).** இத்துணைத்துறை, தொலைத்தொடர்பூட்டலின் அண்மைய அபிவிருத்திகளிலிருந்து, குறிப்பாக அகன்ற பிரிவு வலையமைப்புக்கள் மற்றும் தொடர்பூட்டலின் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய பிரதேச உள்ளடக்கத்தின் விரிவாக்கம்

என்பவற்றால் நன்மையடைந்து உயர் வீதத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து மேலும் 23 சதவீதத்தால் விரிவடைந்தது. தொலைத்தொடர்பூட்டல் கைத்தொழில்களில் செல்லிடத் தொலைபேசி மற்றும் நிலையான இணைப்புக்களைக் கொண்ட பணிகளை வழங்கும் கம்பனிகளுக்கு இவ்வாண்டு சிறந்த ஆண்டாக விளங்கி வருமானத்தில் 37 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. பல்வழி குறியீட்டுப்பிரிவு தொழில்நுட்பத்துடன், நிலையான தொலைபேசிக்காக காத்திருந்தவர்களுக்கு அவற்றை வழங்கி முடித்ததுடன், நிலையாக பொருத்தப்பட்ட உள்நாட்டு இணைப்புக்களை வைத்திருப்போர் 651,681 கொண்ட புதிய இணைப்புக்களைப் பதிவு செய்தது. இது இவ்வருடத்திற்கான 52 சதவீத அதிகரிப்பாகும். அண்மைய காலத்தில் பல்வழி குறியீட்டுப் பிரிவு மற்றும் செல்லிடத் தொடர்பூட்டலுக்கான உலகளாவிய முறைமையைக் கொண்ட தொழில்நுட்பம் கிராமத்தில் வதிவோர் தொலைபேசிப் பணிகளை உடனடியாகவே பெற்றுக்கொள்ள அனுமதித்தது. செல்லிடத் தொலைபேசியை வைத்திருப்போரின் எண்ணிக்கை மேலும் 61 சதவீதத்தால் அதிகரித்துடன் இவர்களின் எண்ணிக்கை 5.4 மில்லியனாக விளங்கியது. இதேவேளை, இணையம் மற்றும் மின்னஞ்சல் என்பவற்றை வைத்திருப்போரின் எண்ணிக்கை, திறமான தரம், இணையத்தைப் பெறுவதற்கான உயர்வேகத்துடனான தரவு இணைப்பை வழங்கும் உட்கட்டமைப்பிலான அபிவிருத்திகளுடன் 13 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**சரக்குக் கையாளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பண்டகசாலை துணைத்துறை இவ்வாண்டில் 13.2 சதவீதத்தால் விரிவடைந்தது.** யூலை மாதத்தில் ஜெயா கொள்கலன் முடிவிடத்தல் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படி வேலை பிரசாரத்தின் மத்தியிலும் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை மாற்றிக் கப்பலேற்றல் நடவடிக்கைகள் மற்றும் கையாளப்பட்ட மொத்தச் சரக்கு என்பன குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தன. அதிகமான பன்னாட்டு கப்பற்படுத்தும் நிறுவனங்களால் கொழும்புத்துறைமுகத்தினூடான புதிய கப்பற்படுத்தும் பணிகள் ஆரம்பித்தமையும் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. சவுத் ஏசியா கேற்வே ரேமினல் உள்ளிட்ட கொழும்பு துறைமுகம் 2006இல் குறிப்பிடத்தக்க அளவான 3.08 மில்லியன் இருபது அடிக்குச் சமனான அலகுகளை கையாண்டது. வழமையாக கையாளப்பட்ட மொத்த வெளியீட்டில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கிற்கும் கூடுதலாக பங்கிற்கு வகை கூறிய மாற்றிக் கப்பலேற்றல் அளவு 37 சதவீதத்தால் விரிவடைந்திருக்கையில் உள்நாட்டு வெளியீடு சிறிதளவால் அதிகரித்தது.

**போக்குவரத்து துணைத்துறை முன்னைய ஆண்டின் 3.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதத்தால் விரிவடைந்தது.** வீதி வழிப்பொருட் போக்குவரத்துச் செயற்பாடுகளில் ஏற்பட்ட 5.3 சதவீத வளர்ச்சி வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளின் திருப்திகரமான செயலாற்றத்தால் ஏற்பட்டதாகும். வான் பணிகள் மொத்த பயணிகள் கிலோ மீற்றருக்கு 2006இல் மேலும் அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன், சிறிலங்கன் எயர்லைன்ஸாலும், உள்ளூர் வான் நிறுவனங்களாலும் பறக்கப்பட்ட மொத்த பயணிகள் கிலோமீற்றர்கள், உயர் எரிபொருள் விலைகள் மற்றும் சுற்றுலா வருகைகளிலான வீழ்ச்சிக்கு மத்தியிலும் 9 சதவீதத்தால் அதிகரித்தன. இலங்கை புகைவண்டிப் பகுதி மற்றும் கொத்தணி பேருந்துக் கம்பனிகளால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் சகல ஏனைய நிதியியற் பணிகள், உண்மைச் சொத்து, வசிப்பிடங்களின் சொத்துரிமை, வாடகை மற்றும் ஏனைய வியாபாரப் பணிச் செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிதியியல் பணிகள், உண்மைச் சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் துறை முன்னைய ஆண்டின் 6.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2006இல் 9.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** வங்கித்தொழில்துறையின் கொடுகடன் விரிவாக்கம் மற்றும் ஏனைய நிதியியற் பணிகள் துணைத் துறைகளின் செழிப்பான செயலாற்றங்களுடன் நிதியியற் பணிகள் 10.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வாண்டில், வர்த்தக வங்கிகளின் வருமானம், முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் மற்றும் பிணையங்கள் மீதான முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. இதேவேளை, வர்த்தக வங்கிகளின் வட்டியல்லா வருமானம், வெளிநாட்டு செலாவணிச்சந்தையிலான அதிகரித்த செயற்பாடுகள் காரணமாக முன்னேற்றமடைந்தது. குத்தகை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் இவ்வாண்டில் செழிப்பான வளர்ச்சியைப் பதிவு செய்தன. உண்மைச் சொத்திலான சிறந்த செயலாற்றம் மற்றும் குறிப்பிட்ட வியாபாரப் பணிகளின் உயர் செயற்பாடுகள் உண்மைச் சொத்து, வாடகை மற்றும் வியாபாரப் பணிகள் துணைத்துறையை 6.2 சதவீதத்தால் விரிவடையச் செய்தது. தொடர்மாடிகளின் அபிவிருத்திச் செயற்றிட்டத்திலான செழிப்புடன் உண்மைச் சொத்துத்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. உண்மைச் சொத்து செயற்பாடுகளின் இலாபகரத்தன்மை காரணமாக இவ்வாண்டில் பாரிய நிதிக் குழுமங்களும் தொடர்மாடிக் கைத்தொழிலில் முதலீடு செய்தன.

**பொதுநிருவாகம், ஏனைய அரச பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியாள் பணிகள் துறை முன்னைய ஆண்டின் 5.4 சதவித அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அரசதுறைக்கு ஆட்சேர்க்கும் பாரிய நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் இவ்வாண்டில் இடம் பெறாததால் பொது நிருவாகம், ஏனைய அரச பணிகள் மற்றும் பாதுகாப்புத்துறை 1.5 சதவீத வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்தது. எனினும், இத்துணைத்துறையின் வளர்ச்சி பெரும்பாலும் ஆயுதப்படைகளின் விரிவாக்கத்தால் ஏற்பட்டதாகும். ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியாள் பணிகள் துணைத்துறை, தனியார் நலக்கவனிப்பு கைத்தொழில், பொழுதுபோக்கு மற்றும் கல்விப் பணிகளிலான செழிப்பான வளர்ச்சியின் பகுதிக் காரணத்தால் 4.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

## 2.4 செலவினம்

**உள்நாட்டு பொருளாதார செயற்பாட்டினால் உருவாக்கப்பட்ட மொத்தக் கேள்வி, பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் அளவிடப்படுகிறது.** 2006இல் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டுக் கேள்வி ரூ.3,125 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 2005 உடன் ஒப்பிடுகையில் 20.9 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. 2005 இல் உள்நாட்டுக் கேள்வி தொடர்பான அதிகரிப்பு 16.8 சதவீதமாகும். 2006இல் உயர் பொருளாதார வளர்ச்சி போன்று விலைகளிலான உயர் வளர்ச்சியும் மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் உயர் விரிவாக்கத்தைத் தூண்டியது. மொத்த உள்நாட்டுச் செலவினம் 2005இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் 8.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2006இல் நுகர்வு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வளர்ச்சியடைந்த போதிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நுகர்வுச் செலவினத்தின் பங்கு 73.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது பொருளாதாரத்தின் முதலீட்டுச் செயற்பாடுகளில் உயர் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. மொத்த உள்நாட்டுச் செலவினதும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் தேறிய இறக்குமதிகளினதும் கூட்டுத் தொகையான நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உற்பத்தி ரூ.2,802 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 18.4 சதவீத வளர்ச்சியாகும்.

### நுகர்வு

**தனியார் மற்றும் அரசதுறை இரண்டினதும் பொருளாதாரத்தின் நுகர்வை கையப்படுத்தும் நுகர்வுச் செலவினம் 2006இல் ரூ.2,322 பில்லியனுக்கு 18.6 சதவீதத்தால் விரிவடைந்தது.** இந்நுகர்வின் வளர்ச்சி, உண்மை நுகர்வு 7.2 சதவீதத்தால் விரிவடைந்ததாலும், 10.7 சதவீதம் கொண்ட

**அட்டவணை 2.11**

**கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்லியன்) | | | நிலையான (1995) விலைகள் (ரூ.மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005(அ) | 2006(ஆ) | 2004 | 2005(அ) | 2006(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 1,706,994 | 1,956,987 | 2,321,881 | 981,917 | 1,009,751 | 1,082,130 |
| (% மாற்றம்) | 15.2 | 14.6 | 18.6 | 5.0 | 2.8 | 7.2 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 506,942 | 627,533 | 803,366 | 294,255 | 326,587 | 370,229 |
| (% மாற்றம்) | 30.4 | 23.8 | 28.0 | 11.7 | 11.0 | 13.4 |
| **மொத்த உள்நாட்டுக் கேள்வி** | **2,213,936** | **2,584,520** | **3,125,247** | **1,276,172** | **1,336,338** | **1,452,358** |
| (% மாற்றம்) | **18.4** | **16.7** | **20.9** | **6.5** | **4.7** | **8.7** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 736,967 | 792,656 | 885,947 | 424,137 | 447,943 | 469,330 |
| (% மாற்றம்) | 16.4 | 7.6 | 11.8 | 7.6 | 5.6 | 4.8 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 921,537 | 1,011,583 | 1,209,367 | 617,732 | 636,429 | 689,436 |
| (% மாற்றம்) | 24.3 | 9.8 | 19.6 | 9.1 | 3.0 | 8.3 |
| தேறிய வெளிநாட்டுக்கேள்வி | **-184,571** | **-218,927** | **-323,420** | **-193,595** | **-188,486** | **-220,106** |
| **இ. மொத்தக் கேள்வி** | **2,029,365** | **2,365,593** | **2,801,828** | **1,082,577** | **1,147,852** | **1,232,252** |
| (% மாற்றம்) | **15.2** | **16.6** | **18.4** | **5.4** | **6.0** | **7.4** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

விலை மட்டங்களின் பொதுவான அதிகரிப்பாலும் ஏற்பட்டது. மொத்த நுகர்வில், தனியார் நுகர்வுச் செலவினம் 89 சதவீதப் பங்கைக் கொண்டிருந்தது. இது 2005இல் பதிவு செய்யப்பட்ட 90 சதவீத பங்கை விட குறைவானதாகும். உற்பத்தி செய்த நாடுகளின் நியதிகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் 14.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் 24.8 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் அதிகரித்தன.

**அண்மைய ஆண்டுகளில் உணவு மற்றும் வெறியக் குடிவகையற்ற பானங்களின் செலவினப் பங்கில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2006இல் ஓரளவிற்கு மாற்றமடைந்தது. இவ்வாண்டில் இவ்வகையின் பங்கு 33.1 சதவீதத்துக்கு ஒரு சிறிய அதிகரிப்பைக் காட்டியது.** இதேவேளை, செலவினம் இவ்வாண்டில் பெயரளவு நியதிகளில் 19.7 சதவீதத்தால் அதிகரித்தது. சாதனைமிகக் அறுவடைகளுடன் விலை மட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக முக்கிய உணவான அரிசி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்த போதும் மீன், சீனி மற்றும் பால் உற்பத்திகள் போன்ற ஏனைய பல உணவுப் பொருட்கள் அதிகரிப்பைக் காட்டின. கலால் தீர்வைகளின் மேல் நோக்கிய திருத்தங்களைப் பகுதியளவில் பிரதிபலிக்கும் வகையில் வெறியக் குடிவகைகள் புகையிலை மற்றும் போதைப் பொருள் மீதான செலவினம் 11.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**உடை மற்றும் வீடமைப்பு தொடர்பான பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 2006இல் 7 - 10 சதவீத வீச்சினுள் வளர்ச்சியடைந்தது.** இதேவேளை காலணிகளின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதிலும், ஆடைகள் மற்றும் காலணிப் பொருட்கள் மீதான செலவினம் முன்னைய ஆண்டைவிட குறைவான வீதத்திலேயே வளர்ச்சியடைந்தது. வீட்டுப் பயன்பாட்டு வசதிகளினுள் உயர் மின்வலுத் தீர்வைகள் மற்றும் எரிபொருள் செலவுகளுடன் வலுத் தேவைகள் அதிகரித்திருக்கையில் வீட்டுப் பாவனைப் பொருட்கள் மீதான நுகர்வோர் செலவிடல் 8.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**போக்குவரத்துத் தொடர்பான நடவடிக்கைகள் மீதான தனியார் செலவிடல் பெயரளவு நியதிகளில் 33.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இறக்குமதிப் புள்ளிவிபரங்கள் மற்றும் புதிய உந்து ஊர்திகளின் பதிவால் பிரதிபலிக்கப்பட்டவாறு உந்து ஊர்திகளின் கொள்வனவின் அதிகரிப்பு இவ்வகையில் அதிகரித்த செலவிடலுக்கான மூலமாக விளங்கியது. அத்துடன், தனியாள் போக்குவரத்துக்கருவி மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பவற்றின் தொழிற்பாடு மீதான செலவினமும் அதிகரித்த பேரூந்துக் கட்டணங்களாலும், எரிபொருள் விலைகளிலான பொதுவான அதிகரிப்பாலும் வளர்ச்சியடைந்தது.

**சகல செலவின வகைகளிலும், தொடர்பூட்டல் பணிகள் மீதான தனியார் செலவிடல் முன்னைய ஆண்டைப் போன்றே விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நுகர்வோர் விடயமாக தொடர்ந்து விளங்கியது.** தொலைத் தொடர்பூட்டல் பணிகள் மீதான நுகர்வோர் செலவிடல், புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் அழைப்புக் கட்டணங்களுடன் இப்பணிகளை வழங்குவோர் சந்தையில் அவர்களின் நுழைவை விரிவாக்கியதன் மூலம் 2006இலும் தொடர்ந்தும் விரிவடைந்தது. இதேவேளை தொடர்பூட்டல் பணிகளின் செலவினத்திலான பெயரளவிலான வளர்ச்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 42.7 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வகை மொத்தச் செலவினத்தின் 3.4 சதவீதப் பங்கை பிரதிநிதித்துப்படுத்தப்படுகிறது.

**இவ்வாண்டில், நலப்பணிகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தது .இது 2005 உடன் ஒப்பிடுகையில் தேய்வினைக் காட்டுகிறது.** குடித்தொகை முதிர்ச்சியடைகையில் நலத்துறைச் செலவினத்திலான அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவது இயல்பான நிகழ்ச்சியாகும். அத்துடன் மருந்து மற்றும் மருந்தாக்கற் பொருட்களின் இறக்குமதிகளும் அதே போக்கையை பிரதிபலித்தன. விசேடமாக, தனியார் துறையின் தீவிர பங்கேற்புடன் கல்விப் பணிகள் மீதான செலவிடல் பன்முகப்படுத்தப்பட்டன.

**உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளுடன் களியாட்டம் மற்றும் பொழுது போக்குச் செயற்பாடுகள் மீதான செலவிடல் 10 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்தது.** இது, 2005இல் பதிவு செய்யப்பட்ட 15 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி உத்வேகத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைக் காட்டுகிறது. அதிகரித்துச் செல்லும் பாதுகாப்புக் கரிசனை காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்நாட்டு சுற்றுலாச் செயற்பாடுகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், மாற்றமடைந்துவரும் வாழ்க்கை முறையுடன் ஏனைய களியாட்டம் மற்றும் உணவகச் செயற்பாடுகள் மீதான செலவிடல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான வீதத்தில் அதிகரித்தது.

**அட்டவணை 2.12** **நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| | தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு % | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2004(அ) | 2005(ஆ) | 2006(இ) | 05/04 | 06/05 |
| 1. உணவு, வெறியமல்லாக் குடிவகை | 32.6 | 32.5 | 33.1 | 13.9 | 19.7 |
| 2. வெறியக் குடிவகையும், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 4.4 | 4.3 | 4.1 | 13.6 | 11.5 |
| 3. புடவையும் காலணியும் | 6.0 | 5.8 | 5.3 | 9.2 | 7.5 |
| 4. வீடமைப்ப மற்றும் பொது வசதிகள் அமைப்ப | 16.1 | 15.6 | 14.4 | 10.7 | 10.2 |
| 5. வீட்டுச் சாதனங்களும் திருத்தங்களும் | 5.0 | 5.0 | 4.7 | 14.6 | 8.7 |
| 6. நலம் | 3.7 | 3.8 | 3.5 | 16.0 | 10.0 |
| 7. போக்குவரத்து | 12.1 | 11.9 | 13.5 | 12.1 | 33.3 |
| 8. தொலைத் தொடர்பூட்டல் | 2.4 | 2.8 | 3.4 | 34.8 | 42.7 |
| 9. களியாட்டமும் பொழுதுபோக்கும் | 3.5 | 3.7 | 3.6 | 22.5 | 11.8 |
| 10. கல்வி | 1.6 | 1.6 | 1.5 | 14.7 | 10.3 |
| 11. உணவகங்களும் விடுதியும் | 1.4 | 1.4 | 1.3 | 15.9 | 10.9 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் (ஈ) | 11.3 | 11.6 | 11.4 | 17.7 | 15.1 |
| **மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு** | 100.0 | 100.0 | 100.0 | 14.3 | 17.4 |

(அ) மதிப்பிடப்பட்டது
(ஆ) திருத்தப்பட்டவை
(இ) தற்காலிகமானவை
(ஈ) தனியாள் கவனிப்பு, தனியாள் பொருட்கள், சமூகப் பாதுகாப்பு, காப்புறுதி நிதியியல் பணிகள் மற்றும் வே.எ.கு, மற்றைய பணிகள் உட்பட.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**கடந்த இரு ஆண்டுகளாக, பொதுவாக தனியார் நுகர்வுச் செலவினம், பொருட்கள் மீதான செலவிடல் நியதிகளில் வீழ்ச்சியடைந்த செல்லும் பங்கைக் கொண்டிருந்தது.** எனினும், 2006இல் அதிகரித்துச் செல்லும் உயர் வீதத்தில் பொருட்கள் மீதான செலவிடலுடனான இப்போக்கில் விலகிச் செல்லல் காணப்படுகிறது. இது, குறிப்பாக ஆண்டின் பின்னைய பகுதியில் அதிகரித்துச் செல்லும் விலைமட்டங்களின் தாக்கத்தைப் பகுதியளவில் பிரதிபலித்தது.

**அரசதுறை நுகர்வு 2005இன் சார்பு ரீதியில் குறைந்த வளர்ச்சியான 18.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006 காலப்பகுதியில் பேரளரீதியில் 29.9 சதவீதத்தால் அதிகரித்தது.** அரசதுறை ஊழியர்களுக்கு உயர் சம்பளங்களுடனான அரச கூலிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் கிழக்கின் பாதுகாப்பு நிலைமை அதுபோல் இவ்வாண்டில் இடம் பெற்ற இயற்கை அழிவுகளுடன் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதில் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்டச் செலவினம் என்பன அரச நுகர்வின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்தன. இத்துடன், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் குடும்ப அலகு, அரச தொழில் முயற்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்களும் 2006இல் அதிகரித்தன.


## முதலீடு

**நடைமுறைச் சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) ரூ.803 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், இது 2005 உடன் ஒப்பிடுகையில் 28 சதவீத அதிகரிப்பாகும்.** உண்மை நியதிகளில் இது 13.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன், மொ.உ.உற்பத்தியின் விகிதமாக முதலீடுகள் 28.7 சதவீதத்திற்கு (2005இல் 26.5 சதவீதம்) மேலும் முன்னேறியது.

**அரச கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கிய தனியார் முதலீட்டின் வளர்ச்சி, அரசியல் உறுதிப்பாட்டுடன் வியாபார நம்பிக்கை பலப்படுத்தப்பட்டமையினால் 2006இல் 31.7 சதவீதத்தால் விரைவாக வளர்ச்சி அடைந்தது.** இப்பலமான வளர்ச்சி, பெரும்பாலும் மேம்பாடடைந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வியிலிருந்து எழும் உயர் இயலளவுப் பயன்பாடுகள் காரணமாக ஏற்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழில், கட்டடவாக்கம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறைகளைக் கொண்ட பொருளாதாரத்தில் உயர் மூலதனச் செலவினம் வெளிப்படையாக காணப்பட்டதுடன் இவ்வாண்டில் முதலீடுகளின் உயர் மட்டத்தைப் பதிவு செய்தது. தனியார் முதலீட்டிலான வளர்ச்சிக்கு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் உதவின.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் 2006இல் ஐ.அ.டொலர் 604 மில்லியனுக்கு 110.3 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்து அண்மைக் காலத்தில் அதிகரித்துச் செல்லும் போக்கைக் காட்டுகிறது.** இவ்வளர்ச்சி, முதலீட்டு உடன்படிக்கைகள் மீதான முன்னுரிமை வரி வீதங்கள் மற்றும் அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதங்களால் வசதிப்படுத்தப்பட்ட முதலீட்டுச்சபையின் அதிகரித்த முயற்சி காரணமாக

**வரைபடம் 2.4** **ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்**



**அட்டவணை 2.13**

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | | | 2006(ஆ) | | | 2005(அ) | 2006(ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை** | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 374 | 354 | 31,511 | 47,961 | 79,473 | 229,363 | 3,751,113 | 3,991,576 | 35,971 | 80,107 |
| பிரிவு 17இன் கீழ் | 222 | 303 | 27,767 | 46,863 | 74,631 | 220,756 | 3,749,880 | 3,970,636 | 29,367 | 65,292 |
| பிரிவு 16இன் கீழ் | 152 | 51 | 3,744 | 1,098 | 4,842 | 8,607 | 1,233 | 20,940 | 6,604 | 14,815 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தம் | 167 | 217 | 32,363 | 42,562 | 74,925 | 38,756 | 3,699,328 | 3,738,085 | 24,536 | 41,559 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள் | 1,871 | 1,929 | 233,523 | 146,606 | 380,129 | 285,367 | 182,650 | 468,016 | 410,851 | 420,690 |
| **வர்த்தகத் தொழிற்பாடுகள் (இ)** | 2,463 | 2,456 | 183,186 | 164,205 | 347,391 | 183,202 | 170,669 | 353,871 | 395,201 | 379,945 |
| பிரிவு 17இன் கீழ் (இ)(ஈ) | 1,642 | 1,615 | 166,596 | 153,267 | 319,863 | 166,278 | 159,711 | 325,989 | 357,681 | 341,909 |
| பிரிவு 16இன் கீழ் (இ) | 821 | 841 | 16,590 | 10,938 | 27,528 | 16,924 | 10,958 | 27,882 | 37,520 | 38,036 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 1,641 | 1,629 | வி.கி | வி.கி | 118,502 | வி.கி | வி.கி | 119,344 | 282,036 | 273,553 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(ஈ) விரிவாக்கப்பட்ட செயற்திட்டங்கள் உள்ளடங்களாக

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

அடையப்பட்டது. நாட்டின் வெளிநாட்டு உட்பாய்ச்சலை அதிகரிப்பதற்கு வியாபாரப் பேராளர் குழு மற்றும் பொருட்காட்சி, வெளி நாடுகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக்குழு போன்ற பல முதலீட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகள் முதலீட்டுச் சபையால் 2006இல் மேற்கொள்ளப்பட்டன. 2006இன் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 60 சதவீதத்திற்கும் கூடியவை தொலைத் தொடர்பூட்டல் மற்றம் புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் கைத்தொழிலில் முதலீடு செய்யப்பட்டன. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் ரூ.3,991.6 பில்லயன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 354 செயற்றிட்டங்களுக்கு 2006இல் ஒப்புதலளிக்கப்பட்டது. இது 2005இன் 79.5 பில்லியன் முதலீட்டு கடப்பாட்டுடன் கூடிய 374 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடத்தக்கது. 2006இல் வான் பணித்துறையில் உள்நாட்டு பாரிய முதலீடு ஒன்று காணப்பட்டது. முதலீட்டுச் சபை செயற்றிட்டங்களில் அடையப்பட்ட ஒருங்கிணைந்த முதலீடு 2005இன் ரூ.380 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2006இல் ரூ.468 பில்லியனுக்கு 23.2 சதவீதத்தால் அதிகரித்தது.

**முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட இந்த 354 செயற்றிட்டங்களில், 82 செயற்றிட்டங்கள் முழுமையாக வெளிநாட்டவர்களுக்கு சொந்தமானதுடன் 87 செயற்றிட்டங்கள் இலங்கையர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கு மிடையேயான இணைந்த தொழில் முயற்சியாகவும் எஞ்சியவை முழுமையாக இலங்கையர்களுக்குச் சொந்தமானவையாகவும். காணப்பட்டன.** முதலீட்டுப் பாய்ச்சல்களின் பாரிய பெறுநர்களாக பணிகள் துறை விளங்கியதுடன், இத்துறை, வான் நிறுவனம் மற்றும் சரக்குப் பணிகள், தொலைத்தொடர்பூட்டல், வீடமைப்பு சொத்து அபிவிருத்தி மற்றும் அலுவலகத் தொகுதிகள், சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய துறைகளில் ரூ.3,942.5 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடனான 222 ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களை ஈர்த்துக் கொண்டது. கைத்தொழில் துறையினுள், முதலீட்டின் ஆகக்கூடிய பங்கு புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோற் பொருட்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் என்பவற்றால் ஈர்த்துக் கொள்ளப்பட்டன.

**முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2005இன் 167 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 217 இற்கு அதிகரித்தது.** பணிகள் துறை 2006இல் உடன்படிக்கை செய்யப்பட்ட முதலீட்டின் 99 சதவீதத்திற்கு வகை கூறியது. பணிகளின் துறையின் முக்கிய பெறுநர்களாக வான் நிறுவனம் மற்றும் சரக்குப் பணி, உண்மைச் சொத்து, வலு உருவாக்கம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் தொடர்பூட்டல் என்பன விளங்குகையில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் முக்கிய பெறுநர்களுள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகைகள் என்பன காணப்பட்டன.

**முதலீட்டுச் சபைச் சட்டம் பிரிவு 17 மற்றும் 16 இன் கீழ் 2006இல் வர்த்தகத் தொழிற்பாட்டை ஆரம்பித்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2005இன் 2,385 உடன் ஒப்பிடுகையில் 2,375 ஆக விளங்கியது.** புடவை, அணியம் ஆடைகள் மற்றும் தோற் பொருட்கள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கிய இச் செயற்றிட்டங்களின் 50 சதவீதத்தை கைத்தொழிற்துறை ஈர்த்துக் கொண்டது. பணிகள் மற்றும் வேளாண்மைத்துறைகள் 2006இன் எஞ்சிய செயற்றிட்டங்களை ஈர்த்துக் கொண்டன.

**2006இல் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 1,629 தொழில் முயற்சிகள் பதிவு செய்யப்பட்டன.** தொழில் முயற்சிகளின் மொத்தப் பதிவிற்குள், புடவை, அணியும் ஆடை மற்றும் தோற் பொருட்கள் வகை தொழில் முயற்சிகளின் கூடிய எண்ணிக்கைக்கு (405) வகை கூறின. இதனைத் தொடர்ந்து இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் (380), உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (268), உணவு குடிவகை மற்றும் புகையிலை உற்பத்திகள் (197), உலோகமல்லா கனிப்பொருட்கள் (84) என்பன வகை கூறியதுடன், இத்தொழில் முயற்சிகளில் 83 சதவீதம் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைந்துள்ளதுடன் மொத்த முதலீட்டின் 94 சதவீதத்தைக் கொண்டிருக்கிறது.

**தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் அரச முதலீட்டுச் செலவினம் ரூ.108 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. முதலீடு பெரும்பாலும், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் கவனஞ் செலுத்தியுள்ளது.** பாரிய உட்கட்டமைப்பு வசதிகள் வெளிநாட்டு அது போல் உள்நாட்டு முதலீட்டாளர்களை கவர்தன் மூலம் பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கும். வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள், புகைவண்டிப் பாதைகள் மற்றும் போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள், நிலக்கரி மற்றும் நீர் மின்வலு, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசும் 2006இல் கவனம் செலுத்தியது.

இதேவேளை, அரச முதலீடு நாட்டின் சமூக தரத்தினைப் பேணுவதற்காக கல்வி மற்றும் நல அபிவிருத்தியிலும் கூடிய கவனஞ் செலுத்தியது.


## மூலங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (உள்நாட்டு மூலவளங்கள்) மற்றும் பொருட்களினதும் காரணியல்லா பணிகளினதும் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பவற்றை உள்ளடக்கி நாட்டில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்கள் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.4,011 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.** இது 2005 ஐ விட 18.8 சதவீத அதிகரிப்பாகும் (ரூ.634 பில்லியன்). இவ்வதிகரிப்பில் ரூ.436 பில்லியன் உள்நாட்டு மூலவளங்களாகவும், ரூ.198 பில்லியன் வெளிநாட்டு மூலவளங்களாகவும் விளங்கின. மூலவளங்களின் மொத்தக் கிடைப்பனவு 7.7 சதவீத வளர்ச்சியை (2005இல் 4.9 சதவீதம்) அடையும் பொருட்டு உண்மை நியதிகளில் வெளிநாட்டு மூலவளங்கள் 8.3 சதவீதம் (2005இல் 3 சதவீதம்) கொண்ட உயர் வீதத்தால் வளர்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டைப் போலவே உள்நாட்டு மூலவளங்கள் 64 சதவீதத்துக்கு வகை கூறுகையில் வெளிநாட்டு மூலவளங்கள் எஞ்சிய 36 சதவீதத்துக்கு வகை கூறிய போதிலும் வெளிநாட்டு மூலவளங்களில் நோக்கி ஒரு சிறு நகர்வே காணப்பட்டது.

**மூலவளங்களின் பயன்பாடு பெரும்பாலும் நுகர்வு, நிலையான மூலதன உருவாக்கம் மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதி என்பவற்றையை உள்ளடக்கியுள்ளன.** 2006இல் நுகர்வு 7.2 சதவீத (2005இல் 2.8 சதவீதம) வளர்ச்சியுடன் மூலவளங்களின் 56 சதவீதத்தை ஈர்த்திருக்கையில், நிலையான மூலதன உருவாக்கம் உண்மை நியதிகளில் 13.4 சதவீத (2005இல் 11 சதவீதம்) வளர்ச்சியுடன் 19 சதவீதத்தை ஈர்த்துள்ளது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதி 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் அதன் தொடர்பான பங்கு 24.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து 2005 ஐ விட குறைவான வளர்ச்சி வீதத்தைப் பிரதிபலித்தது.

**நடைமுறை விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கலில் 66 சதவீதமான பங்கு உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாடுகளால் வழங்கப்பட்ட வேளையில் மீதி இறக்குமதியால் வழங்கப்பட்டது.** முன்னைய ஆண்டில் 38 சதவீத பங்கைக் கொண்டிருந்த உள்நாட்டுப் பணிகளின் வழங்கல் 2006இலும் மாற்றமுறாதிருக்கையில் உள்நாட்டுப் பொருட்களின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து. இங்கு, தயாரிப்பு மற்றும் வேளாண்மைத் துணைத்துறைகளின் பங்களிப்புக்கள் ஒவ்வொன்றும் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு மாறாக, இறக்குமதிப் பொருட்களின் வழங்கல் 28 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் பணிகளின் இறக்குமதி முன்னைய ஆண்டின் 4 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.

**வரைபடம் 2.5 — 2006 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)**




**பொருட்கள் மற்றும் பணிகளுக்கான மொத்தக் கேள்வியில் நடைமுறை நியதிகளில் நுகர்வு மற்றும் மூலதன உருவாக்கத்தின் பங்குகள் முறையே 58 சதவீதத்திற்கும், 20 சதவீதத்திற்கும் சிறிதளவால் அதிகரித்திருக்கையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் பங்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.** அரச நுகர்விலான உயர் விரிவாக்கத்தைத் தொடர்ந்து மொத்த உள்நாட்டு கேள்வியில் தனியார்துறை, முதலீட்டின் 87 சதவீதத்திற்கும் (2005இல் 84 சதவீதம்), நுகர்வின் கிட்டத்தட்ட 89 சதவீதத்திற்கும் (2005இல் 90 சதவீதம்) வகை கூறியது.

## சேமிப்புக்கள்

**2006இல் உள்நாடு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் உயர் வீதங்களில் வளர்ச்சியடைந்த போதிலும், நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் உயர்வீதத்தில் அதிகரித்தமையால் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக இது சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக, உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் முதலீட்டுக்குமிடையேயான வேறுபாடான மூலவள இடைவெளியானது முதலீட்டு விகிதத்திலான வளர்ச்சி உள்நாட்டு சேமிப்புக்கள் விகிதத்திலான வளர்ச்சியை விட விரைவாக அதிகரித்துச்

**அட்டவணை 2.14 — நிலையான விலைகளில் (1996) மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | Percentage Share | | Percentage Growth | |
|---|---|---|---|---|
| | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொ.உ.உற்பத்தி | 64.3 | 64.1 | 6.0 | 7.4 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகள் | 35.7 | 35.9 | 3.0 | 8.3 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 4.9 | 7.7 |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 56.6 | 56.3 | 2.8 | 7.2 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 18.3 | 19.3 | 11.0 | 13.4 |
| தனியார் | 14.7 | 16.1 | -0.2 | 17.8 |
| அரசு | 3.6 | 3.2 | 105.7 | -5.0 |
| இருப்புக்களின் மாற்றம் | 0.0 | 0.0 | 23.4 | 5.2 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 25.1 | 24.4 | 5.6 | 4.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 4.9 | 7.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.15** நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ. மில்லியன் | | சதவீத மாற்றம் | | மொ.உ.உ.வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாடு உற்பத்தி | 2,365,593 | 2,801,828 | 16.6 | 18.4 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 1,956,987 | 2,321,881 | 14.6 | 18.6 | 82.7 | 82.9 |
| தனியார் | 1,761,894 | 2,068,512 | 14.3 | 17.4 | 74.5 | 73.8 |
| அரசு | 195,093 | 253,369 | 18.3 | 29.9 | 8.2 | 9.0 |
| 3. முதலீடு | 627,533 | 803,366 | 23.8 | 28.0 | 26.5 | 28.7 |
| தனியார் | 528,202 | 695,609 | 14.4 | 31.7 | 22.3 | 24.8 |
| அரசு | 99,331 | 107,757 | 119.5 | 8.5 | 4.2 | 3.8 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 408,606 | 479,947 | 26.8 | 17.5 | 17.3 | 17.1 |
| தனியார் | 472,210 | 550,073 | 17.9 | 16.5 | 20.0 | 19.6 |
| அரசு | -63,604 | -70,126 | 18.7 | -10.3 | -2.7 | -2.5 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -218,927 | -323,420 | -18.6 | -47.7 | -9.3 | -11.5 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -30,049 | -40,752 | -45.3 | -35.6 | -1.3 | -1.5 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் | 174,426 | 215,093 | 27.7 | 23.3 | 7.4 | 7.7 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 552,983 | 654,287 | 26.2 | 18.3 | 23.4 | 23.4 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

செல்வதால் 9.3 சதவீதத்திலிருந்து 11.5 சதவீதத்திற்கு கணிசமானளவில் அதிகரித்தது.

**தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் இரண்டையும் உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.480 பில்லியனுக்கு 17.5 சதவீதத்தால் அதிகரித்தன**. கம்பனித்துறை மற்றும் தனியாாள் சேமிப்புக்களின் அதிகரிப்புடன் தனியாள்துறை சேமிப்புக்கள் 16.5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், அரசின் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு நிலுவை என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அரச சேமிப்புக்கள் எதிர்க்கணியமாக விளங்கிய போதிலும் 2005 உடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மேலும் 2.5 சதவீதத்தால் முன்னேற்றமடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள், வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மற்றும் வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையான தேசிய சேமிப்புக்கள் ரூ.654 பில்லியனுக்கு 18.3 சதவீதத்தால் அதிகரித்தன**. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் தொடர்ந்தும் எதிர்க்கணியமாக விளங்கி, வட்டிக் கொடுப்பனவின் அதிகரிப்புடன் ரூ.41 பில்லியனுக்கு மேலும் மோசமடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தேறிய தனியார் மாற்றல்கள் ரூ.215 பில்லியனுக்கு 23 சதவீதத்தால் அதிகரித்தன.